Registered as a NewsPaper

10 MAR 2005

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-26 10-03-2005 வியாழக்கிழமை ஓசை 20



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11459) விநாயகர் வீதி, மமிலிட்டி.

# புலிகளின் விமானங்கள் குறித்து அச்சமூட்டுகிறார் அமைச்சர் ரட்ணசிறி!

## கொழும்பின் அரைவாசி இடங்களை அழிக்குமாம்

**தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருப்பதாகக் கூறப்படும் இரண்டு மென்ரக விமானங்களைக் கொண்டு கொழும்பின் அரைவாசி இடங்களை அழிக்க முடியுமென சிறிலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க எதிர்வு கூறியுள்ளார். நேற்று பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற விசேட சந்திப்பு ஒன்றில் இவ்வாறு கூறியுள்ளார்.**

தொடர்ந்து கருத்துரைத்த அவர்,இந்த இரண்டு மென்ரக விமானங்களும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு போர் நிறுத்த உடன்பாட்டுக் காலத்தின் போதே கிடைத்திருக்கலாமென சந்தேகம் வெளியிட்டார்.குறிப்பிட்ட இரண்டு விமானங்களும் பகுதிகளாகக் கொண்டு வரப்பட்டு இங்கு பொருத்தப்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றும்,

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் உள்ள விமானம் ஒன்றின் மூலம் சுமார் 1500 கிலோ நிறையைச் சுமந்து செல்ல முடியும் எனில் அதன் மூலம் கொழும்பின் அரைவாசிப்பங்கை அழித்து விட முடியும் என்றும்,

போர் நிறுத்த உடன்பாடு செய்யப்பட்டமையானது ஆயுதங்களை சேகரிப்பதற்கு அல்லாமல் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவே என்றும் அமைச்சர் விக்கிரமநாயக்க தெரிவித்தார். (32)

## ஓட்டமாவடியில் ஓட்டோச்சாரதி கடத்தப்பட்டு சுட்டுக்கொலை

மட்டக்களப்பு ஓட்டமாவடி பிரதேசத்தில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஓட்டோச் சாரதியொருவர் இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப் பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் 24 வயதுடைய அப்துல் ஹமீட் மொகமட் ரஹீம் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரது ஓட்டோவை நேற்று முன்தினம் மாலை அப்பிரதேசத்திற்கு சென்ற இருவர் வாகரைக்கு செல்வதாக் கூறி வாடகைக்கு அமர்த்தியுள்ளனர். வாகரை நோக்கி ஓட்டோ சென்றுகொண்டிருந்த சமயம் கஜுவத்தை இராணுவ முகாமிற்கு சற்றுத் தொலைவில் இரண்டு துப்பாக்கிதாரிகள் ஓட்டோவை நிறுத்தி சாரதியான இந்நபரை அழைத்துச் சென்றுள்ளனர். ஏனைய இருவரும் தப்பி வந்து (12ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

05.03.2005 அன்று கிரிமிச்சைப் பகுதியில் இராணுவத்தினரும், தேச விரோதக் குழுவினரும் இணைந்து மேற்கொண்ட தாக்குதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

2ஆம் லெப்டினனட் - புஸ்ப்பராஜ் (காந்தமகாராஜா - உதயகுமார், வாகனேரி-மட்டக்களப்பு. த.மு:-பேத்தாலை, வாழைச்சேனை மட்டக்களப்பு).

(12ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்ஓட்டோ சாரதியின் கொலையின் பின்னணியில் சிறிலங்கா ராணுவம்

### விடுதலைப்புலிகள் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்திலுள்ள கிரிமிச்சையில் முஸ்லிம் ஓட்டோ சாரதியான அப்துல் ஹமீட் ரஹீம் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் சிறிலங்கா இராணுவம் இருப்பதாக விடுதலைப்புலிகளினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று மாலை விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, கிரிமிச்சைப் பகுதியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ள சம்பவம் எங்களுக்கு மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கின்றது. தமிழ் பேசும் சகல மக்களும் ஒற்றுமையாக இருந்த பொற்காலத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்று இருதரப்பும் மிகுந்த பிரயாசையுடன் முயற்சித்துக் கொண்டிருக்கும் வேளையில் இப்படியான தடைகளை ஏற்படுத்தி இலாபமடையநினைக்கும் பேரினவாதிகளின் கைங்காரியமே இதுவென்பதில் சந்தேகமில்லை. முஸ்லிம் மக்கள் தங்கள் வயல்களில் மீண்டும் உழவும் இருதரப்பாருக்கு மிடையிலான நல்லுறவு மீண்டும் தழைத்தோங்கவும் உகந்த இந்த நட்புச்சூழலை சீர்குலைத்து நச்சுச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா கடற்படையினரே பெண்களை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினர்

### - பாதிக்கப்பட்ட பெண்கள் சாட்சியம்

தமிழகத்திலிருந்து மன்னாரூடாக படகுகள் மூலம் தாயகம் திரும்பியவேளை கடலிலுள்ள மணத்திட்டியில் வைத்து சிறிலங்கா கடற்படையினரே தம்மை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏழாம் திகதிதமிழகத்தில் இருந்து மன்னார் ஊடாக தாயகம் திரும்பிய ஈழத்தமிழ் அகதிகளில் பெண்களை தனிமைப்படுத்தி அவர்களை பாலியல் வன்முறைக்குட்படுத்திய சம்பவம் தொடர்பாக கடந்த ஏழாம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் சாட் சியமளித்த பாதிக்கப்பட்ட பெண்கள் தம்மை பாலி யல் பலாத்காரம் புரிந்தவர்கள் சிங்களத்தில் உரையாடியதாகவும், அவர்களிடம் துப்பாக்கிகள் காணப்பட்டதாகவும் அவர்கள் சிறிலங்கா கடற்படையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

## தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழு ஐரோப்பாவிற்குப் பயணமானது

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் மற்றும் தமிழீழ காவல் துறை பொறுப்பாளர் உள்ளிட்ட குழுவினர் ஐரோப்பிய சுற்றுப் பயணத்



தினை மேற்கொள்வதற்காக நேற்று கொழும்புக்குச் சென்றுள்ளனர்.

தற்போது நடைமுறையிலுள்ள சமாதான உடன்படிக்கையில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையினையும் இதில் சிறிலங்கா அரசாங்கம் காட்டும் அசமந்தப் போக்கினையும் மற்றும் சுனாமி அனர்த்தத்திற்கென உலக நாடுகளால் வழங்கப்பட்ட நிவார (12ஆம் பக்கம் பார்க்க)

### -வயோதிபர் மரணம் தொடர்பாக-

## ஏழு படையினரை ஆஜர் செய்ய யாழ்.நீதிமன்றம் உத்தரவு

கடந்த வெள்ளிக்கிழமையன்று பரமேஸ்வராச்சந்திப் பகுதியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் இடம் பெற்ற தாக்குதலின் போது வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், குறித்த வேளையில் அங்கு பிரசன்னமாகியிருந்த படையினர் எழுவரையும் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த அசம்பாவிதத்தின் போது நடாத்தப்பட்டதுப்பாக்கிச் சூட்டினில் குறித்த வயோதிபர் உயிழந்தமை தொடர்பான ஆரம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு வன்முறை குறித்து பாலசிங்கம் சூல்ஹெய்ம் பேச்சு

நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் நேற்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து பேசியுள்ளார்.

கிழக்கில் தொடரும் வன்முறைகள், ஆழிப்பேரலை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் தொடர்பிலும் விடுதலைப்புலிகளிடம் உள்ள விமானப்படை குறித்தும் நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (32)

## கல்முனை மக்களின் போராட்டம் நேற்றும் சில மணிநேரம் தொடர்ந்தது

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேசத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் நேற்றுமுன்தினம் நடத்திய மறியற் போராட்டம் நேற்றும் நடைபெற்றது. பின்னர் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஹேரத் அபயரத்ன வீதிமறியல் போராட்டம் நடத்திய பிரதேசங்களுக்கு நேற்று விஜயம் செய்து ஆர்ப்பாட்டக்காரர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது அளித்த உறுதி மொழியையடுத்து இந்தப் போராட்டம் கைவிடப்பட்டது. இருப்பிடங்களை இழந்த குடும்பங்களுக்கான மாற்றுக்குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்குரிய காணிகள் அடையா (12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### வேலையாட்கள் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு வேலை தெரிந்தவர்கள் இருபாலரும் தேவை. சுயவிபரப் படிவங்களை அச்சகவேலையாட்கள் பதவி,ஈழநாதம்பணிமனை,யாழ்சாலை கிளிநொச்சி என முகவரியிட்டு அனுப்பவும். (5779)

### தேவை

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற, கணக்குப்பதிவு வேலைகள் செய்யக் கூடியவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகட்கு:- கதிர் (அமல்)பல், மூக்குக் கண்ணாடியகம், யாழ்சாலை-கிளிநொச்சி. T.p. 2285748 (சி.10871)

### விற்பனைக்குண்டு

சீமேந்துக்கல் விற்பனைக் குண்டு அளவு -12"x4"x6" விபரங்களை அன்புவாணிபத்தில் அறியலாம். தொடர்புகளுக்கு. F.A அமலதாஸ்: அன்பு பல்பொருள் வாணிபம், அந்தோனியார் கோவிலடி, அளம்பில். (5492)

### காணி விற்பனைக்கு

வள்ளிபுனம் விக்கி குடியிருப்பு வீதியில் வீடுகட்டுவதற்கு ஏற்றபயன் தரும் மரங்கள் கொண்ட 1/2 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.தொடர்பு, தி.ரவி காணி இல-66 விக்கிதிட்ட வீதி, வள்ளிபுனம். (5493)




தமிழீழ காவல்துறையினரின் வட்டுவாகல் சீர்திருத்தப் பிரிவுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் அண்மையில் சென்று அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்தோரை பார்வையிட்டனர். இதன் போது காவல்துறையினருடன் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

# மருத்துவ பீட மாணவர்கள் தொடர்ந்தும் பகிஷ்கரிப்பு

(நல்லூர்)
யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்கள் நேற்றைய தினம் இரண்டாவது நாளாக விரிவுரைகளை பகிஷ்கரித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சத்திரசிகிச்சைக்கான பயிற்சி நெறியை கற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து தர வேண்டும் எனக்கோரி விரிவுரைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாது விட்டால் அடுத்தவாரம் முதல் ஏனைய வருடமருத்துவபீட மாணவர்களும் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து போராட்டத்தில் ஈடுபடும் அவல நிலைமை ஏற்படுமெனவும் மருத்துவபீட மாணவர்சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர் (36,41)

### கோழிகளுக்கு நோய்த் தடுப்பு மருந்து

(அரியாலை)
யாழ்.அரியாலைப் பிரதேசத்திலுள்ள பண்ணையாளர்களுடைய வளர்ப்புக் கோழிகளுக்கான நோய்த்தடுப்பு மருந்துகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பயன் பெறவிரும்பும்பண்ணையாளர்கள் பிரதிசெவ்வாய்,வியாழன் ஆகிய கிழமைகளில் பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் மாலை நான்கு மணிவரையான நேரங்களில் பதிவுகளை மேற்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.இதற்காக அரியாலையில் உள்ள கமநல சேவை உப அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (33)

-புதுக்குடியிருப்பு-

# பொன்னம்பலம் மருத்துவமனையில் என்பு சத்திர சிகிச்சை

(புதுக்குடியிருப்பு)
அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தரவிருக்கும் என்பு சத்திர சிகிச்சை நிபுணர்களினால் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் என்பு, மூட்டு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

முறிவுகள், சீரற்ற முறையில் பொருந்திய முறிவுகள், மூட்டுக்கள் சரிவர செயற்படாத பிரச்சினைகள் போன்றவை உட்பட என்பு, மூட்டுக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிற்கு சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் பயன்பெற விரும்புவோர் நாளையும், நாளை மறுதினமும் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் சத்திர சிகிச்சைப் பிரிவில் தம்மை பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

# யாழ்.பல்கலை ஊழியர் சங்கம் நேற்று வேலைப் பகிஷ்கரிப்பு

(நல்லூர்)
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் நான்கு அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி நேற்றைய தினம் வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை முதல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டமையினால் அலுவலகக் கடமைகள் யாவும் பாதிக்கப்பட்டன. முன்னாள் பதிவாளரை மீண்டும் வேலையில் சேர்ப்பது சம்பந்தமாக செனற் சபை முடிவெடுத்ததைத் தொடர்ந்து நேற்று அடையாளவேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளனர்.

# வைத்தியத் தளபாடங்கள் வழங்கப்பட்டன

வடக்குக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வைத்தியத் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி வைத்தியசாலையில் காணப்படும் வைத்திய தளபாடப் பற்றாக்குறைகளைச் சுட்டிக்காட்டி விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இணங்கவே இவ் உதவி வழங்கப்பட்டிருக்கிறது. (33)

# ஆய்வுப் பெருநூல் வெளியிட்டு விழா

தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் எழுதிய யாழ்ப்பாணத்து தமிழ் பிரபந்த இலக்கியங்கள் என்னும் ஆய்வுப் பெருநூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்விப் பீடத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சபாஜெயராசா தலைமையில் ஏழாலை களவோடை ஸ்ரீ வசந்தநாகபூசணி அம்மன் ஆலய மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. நூலினை யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி சு.மோகனதாஸ் வெளியிட்டு வைக்க, வர்த்தகர் புரவலர் க.சோமசேகரம் முதற்பிரதியை பெற்றுக்கொண்டார். நூல் ஆய்வுரையை பேராதனை பல்கலைக்கழக தமிழ் துறைவிரிவுரையாளர் கலாநிதி வ.மகேஸ்வரன் நிகழ்த்தினார். (41)

# தமிழ், முஸ்லிம் ஒற்றுமையை வளர்க்க புத்தளத்திலிருந்து முஸ்லிம்கள் யாழ்.வந்தனர்

(நல்லூர்)
தமிழ் முஸ்லிம் ஒற்றுமையை மேம்படுத்தும் சமாதான யாத்திரையை புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்கள் மேற்கொண்டு யாழ்.குடாநாட்டிற்கு நேற்று முன்தினம் வந்துள்ளனர்.

வடமாகாண உலாமாக்கள் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சமாதானப் பயணத்தில் சுமார் நூற்றி ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் வந்திருந்தனர்.

புத்தளம் தில்லையடி அரபுக் கல்லூரியைச் சேர்ந்தவர்களே இப்பயணத்தில் வந்திருந்தவர்களாகும். யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து சென்றிருந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் (41)

# புளியம்பொக்கணை சந்தியில் நெற்களஞ்சியம் திறந்துவைக்கப்பட்டது

கண்டாவளைப் பிரதேச விவசாயிகளின் நன்மை கருதி உலக தரிசன நிறுவனத்தின் நிதி உதவியுடன் கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள புளியம் பொக்கணை சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட நெற்களஞ்சியம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பெரியகுளம் கமக்கார அமைப்புத் தலைவர் மகேந்திரம் தலைமையில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன்- ஏற்றிவைத்தார். களஞ்சியக் கட்டடத்தின் பெயர்ப் பலகையினை கிளிநொச்சி மாவட்ட கமநலஅபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி. பி.நாமகள் திரை நீக்கம் செய்துவைத்தார்.

களஞ்சிக் கட்டடத்தினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். (46)

# சுனாமி பாதித்த 180 குடும்பங்கள் உண்ணாப்புலவில் குடியமர்வு

(முல்லைத்தீவு)
சுனாமியால் இடம் பெயர்ந்து முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் தங்கியிருந்த கள்ளப்பாடு தெற்கு கிராமத்தை சேர்ந்த 180 குடும்பங்கள் நேற்று முன் தினம் காலை 10.00 மணிக்கு உண்ணாப்புலவில் அமைக்கப்பட்ட குடிசைகளில் குடியமர்த்தப்பட்டன.

இவர்களுக்கான உடனடி நிவாரணப் பொருட்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் செயலணிப் பொறுப்பாளர் மாறன் கடற்புலிகளின்சுனாமி புனரமைப்புப்பொறுப்பாளர் க.தினேஷ், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முல்லை.மாவட்டபொறுப்பாளர் மூர்த்திஆகியோர்கலந்து கொண்டனர். (20)

## கண்டெடுப்பு

கோபால சுந்தரம் என்பவரது பயணஅனுமதியட்டையும், பணப்பையும் கண்டெடுக்கப்பட்டு புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.


## திருமறைக் கலாமன்றம் வழங்கும் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி





## தவக்கால ஆற்றுகை

01. இடம் :- அளம்பில் , புனித அந்தோனியார் ஆலய முன்றல்.
காலம் :- 11.03.2005- வெள்ளிக்கிழமை.
நேரம் :- 07.30 மணி.

02. இடம் :- இரணைப்பாலை, புனித அந்தோனியார் விளையாட்டு மைதானம்.
காலம் :- 13.03.2005- ஞாயிற்றுக்கிழமை.
நேரம் :- 07.30 மணி.

கல்வாரி நோக்கிய இறைமகனின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நாளைய பத்திரிகையில் அறிவிக்கப்படும்

திருமறைக் கலாமன்றம்.

(5783)

# ஜேர்மன் மருத்துவ குழுவினர் யாழ்.குடாநாட்டில் சிகிச்சை

(பருத்தித்துறை)

**பருத்தித்துறை மந்திகை போதனா வைத்தியசாலைக்கு ஜேர்மன் கியூமெடிக்கா நிறுவனத்தைச் சேர்ந்த ஒன்பது பேர் கொண்ட மருத்துவக் குழுவினர் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.**

ஜேர்மன் கியூமெடிக்கா தொண்டர் நிறுவனத்தைச் சேர்ந்த இவ் மருத்துவ குழுவினர் நேற்று காலை 9.00 மணியளவில் வைத்தியசாலைக்கு விஜயம் செய்து வெளிநோயாளர் பகுதியில் பொது மருத்துவத்தில் ஈடுபட்டனர்.

இவ் மருத்துவ குழுவின் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்வதற்காகவே இங்கு வருகை தந்துள்ளனர். இவர்களில் மற்றொரு குழுவினர் கற்கோவளப் பகுதியில் சுனாமி அனர்த் செயலகத்தினால் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்ட நிலையத்தில் பொது மருத்துவ முகாம் ஒன்றை மேற்கொண்டனர்.

மாலை இரண்டு குழுவினரும் ஒன்று சேர்ந்து பருத்தித்துறை சென்று சுனாமி ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்களுக்கான பொது மருத்துவத்தில் ஈடுபட்டனர்.

இவ் மருத்துவ குழுவிற்கு தலைமை தாங்கி வந்திருந்த ஜேர்மன் கியூமெடிக்கா நிறுவனத்தை சேர்ந்த வைத்திய காலநிதி கருத்துத் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறைப் பிரதேசத்தை தாம் தெரிவு செய்துள்ளதாகவும் இங்கு சுனாமியால் பாதிப்படைந்த மக்களுக்கு சேவை செய்வதற்காகவே தாம் விஜயம் செய்துள்ளதாகவும் தெரிவித்தார். (கா)

## நல்லூர் பிரதேச சபைப் பிரிவில் பாரிய தொழில் நிறுவனம் அமைக்க கட்டுப்பாடு

( நல்லூர்)

யாழ்.நல்லூர்ப் பிரதேசசபை பிரிவிலுள்ள திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில், கல்வியங்காடு ஆகிய பகுதிகளில் உள்ள பெரிய அளவிலான வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் அனைத்தும் சூழல் அதிகார சபையின் அனுமதி உரிமம் பெற்றே இயங்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உரிமம் பெறாது பெரியளவிலான வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் இயக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. அவ்வாறு இயங்கும் நிறுனங்கள் மீது கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென நல்லூர் பிரதேச சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## கிராம அலுவலர் அலுவலகம் அமைப்பதில் அடாவடி

(நல்லூர்)

குடியிருக்கும் வீட்டில் குடியிருப்பவரின் அனுமதியின்றி கிராம அலுவலர் ஒருவர் அலுவலகம் அமைக்க முற்பட்டதுடன் அங்கு நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்தியதாகவும், வலிகாமம் பகுதி அரசியல்துறையில் முறையிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வீட்டில் வாடகைக்கு குடியிருப்பவர்களை வீட்டில் இருந்து அகற்றும் முகமாக இத்தகைய அடாவடித்தனமான செயலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே இக்கிராம அலுவலருக்கு எதிராக பலமுறைப்பாடுகள் பிரதேச செயலாளர் மற்றும் உடுவில் அரசியல்துறைக்கும்பொதுமக்கள் செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (41)

## — வடக்குக் கிழக்கில் சுனாமி பாதித்த —
## 128 பாடசாலைகளைப் புனரமைக்க 6453 மில்லியன் தேவை

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 128 பாடசாலைகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு 6453 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிதியானது சர்வதேச நாடுகளிடமும், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களிடமும் இருந்து பெறப்பட்டவுள்ளதாக கல்வித்திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்குக் கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசப் பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்ய அரசு துரித நடவடிக்கை எடுக்காததனால் இப்பகுதி மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். .(33)

## சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க நடமாடும் சேவை

(நெடுந்தீவு)

யாழ். நெடுந்தீவில் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான நடமாடும் சேவைகள் எதிர்வரும் 23ஆம் .24 ஆம் திகதிகளில் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறும்.

இதில் 23 ஆம் திகதி சாரதிய நடைமுறைகள் சம்பந்தமான எழுத்துப்பரீட்சையும், 24 ஆம் திகதி செய்முறைப்பரீட்சையும் இடம்பெறும்.

இந்நடமாடும் சேவையில் சாரதி அனுமதிப்பத்திரங்களை பெறவிரும்புவோர் நாளைய தினத்திற்குள் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையில் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## மகளிர் அரசியல் துறையினரால் பெண்களுக்கான கலந்துரையாடல்

(நல்லூர்)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நேற்று முன்தினம் மாலை நல்லூர் யாழ்ப்பாணக் கோட்ட மகளிர் அரசியல் துறையினரால் பெண்களுக்கான கலந்துரை யாடல் ஒன்று நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி,நல்லூர் பிரதேச மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூமகள், சண்டிலிப்பாய்ப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன், கொக்குவில் மாதர் சங்கச் செயலாளர் செல்வி. சுகந்தி ஆகியோர் ஏற்றிவைத்த னர்.தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் செயற்திட்ட அலுவலர் செல்வி. வேழினி,யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, நல்லூர் பிரதேச மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூமகள் சண்டிலிப்பாய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன் ஆகியோர் உரைநிகழ்த்தினர் (41,33).

## மலசலகூட மானியம் பெற விண்ணப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

மலசலகூட மானியங்களைப் பெற விரும்புவோர் தமது விண்ணப்பங்களைத் தத்தமது பிரதேச சுகாதார பரிசோதகர் பிரிவுகளூடாகச் சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2500 ரூபாவிற்கு உட்பட்ட மாத வருமானத்தையுடைய வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருவோர் இதற்கு விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## வீதி புனரமைக்கப்படுமா?

கொடிகாமம் பாலாவி தெற்கில் குடியிருக்கும் குடும்பங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதில் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். இந்தக் கிராமத்தையும் நகரங்களையும் இணைப்பதற்கு முருங்கையடி வீதியே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த வீதி முற்று முழுதாக சேதமடைந்துள்ளது.இவ்வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்கள், சந்தைவியா பாரிகள், பொதுமக்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதில் பெரும்நெருக் கடிகளை எதிர் நோக்குகின்றனர்.இவ்வீதியினைப்புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

## தீவக வேலைத்திட்டங்கள் குறித்து முக்கிய கலந்துரையாடல்

(தீவகம்)

யாழ். தீவகக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் 2005 ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டங்கள் குறித்து ஆராயும் முக்கிய கலந்துரையாடல் நாளை காலை 9.00 மணிக்கு வேலணைப் பெருங்குளம் மாரியம்மன் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் சகல தீவகப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## அழிந்த பாடசாலைகளை நிர்மாணிக்க காணி இல்லை

(வடமராட்சி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டின் கரையோரப் பிரதேசப் பாடசாலைகளில் 10 பாடசாலைகள் இடமாற்றி நிர்மாணிக்கப்பட வேண்டிய தேவைப்பாடு உள்ளபோதும் அவற்றை இடம்மாற்றி நிர்மாணிப்பதற்கான காணிகளைப் பெறுவதில் பெரும் சிக்கல்கள் நிலவுகின்றன.

இதனால் இப்பாடசாலைகளைப் பாதுகாப்பான இடங்களில் நிர்மாணிக்கும் பணிகள் தாமதமடையும் சூழ்நிலை உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33)



கொடிகாமம் அரசியல்துறை பணிமனையில் நடத்தப்பட்ட பொலிசாரின் அராஜக நடவடிக்கைகள் குறித்து போர் நிறுத்த கண்காணிப்பு குழு விசாரணை நடத்துவதையும் மற்றும் அலுவலகத்தின் ஏனைய பகுதிகளை கண்காணிப்பு குழு பிரதிநிதிகள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

படப்பிடிப்பு:- ஆன்சிலின்

# தலைவன் காட்டும் வழியில் தலைநிமிர்வோம்

# முல்லை அன்னையர் முன்னணி அறிக்கை

"மங்கையராகப் பிறப்பதற்கு நல்ல மாதவம்செய்திட வேண்டும்" என்று கவிஞர் தேசிக விநாயகம்பிள்ளை பாடினார். ஆனால் அதற்கு முன்னரே மாதர் தம்மை இழிவு படுத்தும் மடமை தன்னைச் சாடினார் சுப்பிரமணியப்பாரதியார். மாதவப் பயனாற் கிடைக்கப் பெற்ற பெண் பிறப்பிற்குரியவள், யத்தைக் கோருவதற்குக்கூட உரிமையற்றவளாக அடிமைப் படுத்தப்பட்ட காலத்திலேதான் பாரதி பெண்ணின் விடுதலைக்கு வித்திட்டான். பெண் என்பவள் அடிமையில்லை.நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை, யார்க்கும் அஞ்சாத ஞானச்செருக்கும் கொண்ட புதுமைப்பெண்ணை

**சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு "எழுக பெண்ணினமே" என்ற தலைப்பில் முல்லைத்தீவு மாவட்ட அன்னையர் முன்னணி வெளியிட்ட அறிக்கை.**

ஆதியிலே அடக்கி ஒடுக்கப் பட்டாள், வீட்டிற்கு வெளியே வருவதே பெரிய பாவமாகக் கருதப் பட்டாள் அதனாலே உயர்கல்வி ஏன் சாதாரணகல்வி கற்கக் கூட மறுக்கப்பட்டாள். சமூகத்திலே மற்றவர்களால், குறிப்பாக புருஷர்களால் இழைக்கப்படும் அநீதிகளைக் கூட எடுத்துக்காட்டி நியா இப்பாரினிலே துணிந்து படைத்தான்.பரம்பரை பரம்பரையாக அடிமைப்படுத்தப்பட்டு பெண்கள் என்றால் அடிமைதான் என்று பெண்களே எண்ணி அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் தமக்கு அணிகலன் என்று முக்காடிட்டிருந்த காலத்திலே தான் நாணமும், அச்சமும், நாய் கட்கு வேண்டுமாம் என்று பாடி புரட்சிகரமான புதுமைப்பெண்ணின் படைப்பால் பெண்ணினம் மெல்லமெல்ல விழித்துக்கொள்ளத தொடங்கியது. பெண் என்பவள் புதுமையானவள்தான். எந்தப் பெரிய துயரங்களையும் தனது இனிய பேச்சால், புன்னகையால், அரவணைப்பால் நொடிப் பொழுதில் துடைத்தெறியச் செய்யும் ஆற்றல் மிக்கவள் பெண். கணவன் எட்டு மணித்தியாலங்கள் வேலைசெய்யும்போது குடும்பத்திலே மனைவி பதினெட்டு மணித்தியாலங்கள் வேலைசெய்கின்றாள்.

குடும்பத்திலே சகலரது தேவைகளையும் அவளே பூர்த்தி செய்கின்றாள். எல்லோரினதும் தேவைகள், குறைபாடுகள், பிரச்சினைகள் சகலத்திற்கும் ஈடு கொடுத்து தேற்றி ஆறுதல் அடையச் செய்கின்றாள். இத்தனைக்கும் அவளிடம் இயற்கையாய் அமைந்த புதுமைப் படைப்பு விதியே காரணம்.

மலைபோன்ற துயரத்தையும் ஒரேயொரு பாசமுத்தத்தாலும், அரவணைப்பாலும், இன்சொல்லாலும், தூரவிரட்டியடிக்கும் உன்னதசக்தி பெண்ணிடமே அமைந்துள்ளது. இதிலே பெரியதோர் அதிசயம் என்னவெனில் பெண்குலமே தனது திறமையை, மகத்தான சக்தியை உணராமல் இருப்பதுதான். இது ஒருபுறம்.

மறுபுறத்தைப் புரட்டிப்பார்த்தால் அன்று பாரதியால் பெண்ணின விடுதலைக்காக இடப்பட்ட வித்து இன்று தமிழீழத்திலே பெரியதோர் விருட்சமாகி ஆழவேர் விட்டு, அகலக்கிளைப் பரப்பி முழுமை பெற்று விளங்குவதற்கு முக்கிய சக்தியாக விளங்குபவர் எமது தமிழீழத் தேசியத்தலைவர் தான் என்பதை மறுக்கவோ அன்றிமறைக்கவோ எவராலும் முடியாது.

தமிழீழப் பெண் இன்று ஆயுதத்தை ஏந்தி பகைவர் படையணிகளை எமது எல்லையிலே கால் பதிக்கவரும் எதிரியை ஓடஓட விரட்டுகின்றாள். ஆழக்கடலிலும் ஆச்சரியப்படவைக்கும் விதத்தில் தமிழீழ மானங்காக்கத் தலை நிமிர்ந்து நிற்கின்றாள்.

அது மட்டுமா அரசியலில் அகில உலகமே வியக்கும் வண்ணம் உயர்ந்து நிற்கின்றாள். தரணியெல்லாம் தன்பணிக்குச் செல்கின்றாள். தமிழீழப் பெண் வீறுகொண்டெழுந்து வீரவிடு தலைப்புலியாய் மாறி தமிழினத்தைக் கூறிட எண்ணும் கொடியவர் கூட்டத்தைக்குதறிடும் துணிச்சல் பெற்ற தமிழீழப் பெண்ணால் தமிழீழத்திலேயே பிறந்த அத்தனை பேருமே பெருமைப்பட்டு தலையை நிமிர்த்திக் கொள்கின்றோம்.

இனியும் அடிமையாய் மற்றவர்களுக்கு சுமையாய் வாழ்வதை விடுவோம். தலைவன் காட்டும் வழியில் தலை நிமிர்வோம்.(சோ)

## சமூக ஆற்றுப்படுத்தல் பயிற்சி

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிஉதவியுடன் நடை முறைப் படுத்தப்படும் சமூக அபிவிருத்தித் திட்டத்தில் பதினொரு கிராமங்களில் கடமையாற்றும் கிராமதிட்ட அலுவலர்கள். சமூக உணர்வூட்டாளர்கள்,கிராம தொண்டர்கள் ஆகியோருக்கு சமூக ஆற்றுப் படுத்தல் பயிற்சி நெறி பாரதிபுர கிராம பொதுமண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட்திட்ட இணைப் பாளர் க.ரவிக்காந் தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளக்கினை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட்திட்டப் பணிப்பாளர் சி.சுடர் அவர்களும், கிளிநொச்சி மாவட்டப்பணிப்பாளர் வே.கெங்காதரன் அவர்களும், பாரதிபுர சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தலைவர் பொ.இராமலிங்கம் அவர்களும் நிகொட்திட்ட சமூக உணர்வூட்டாளர்களுக்கான இணைப்பாளர் செல்வி றூபா அவர்களும் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக்கொடியினை பாரதிபுர ஊரகவளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் அன்புமாறன் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டச் செயலக நிகொட்திட்ட உதவித்திட்டப்பணிப்பாளர் செல்வி துசியந்தி அவர்களும், மாவட்டப் பணிப்பாளர் வே.கெங்காதரன் அவர்களும் கருத்துரை நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து பயிற்சியாளர்களுக்கான பயிற்சியினை சமூக உணர்வூட்டாளர்களுக்கான இணைப்பாளர் செல்வி றூபா அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில் 33 பயிற்சியாளர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

**-தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால்-**

## மகளிர் தினத்தை முன்னிட்டு மூதூர், கிண்ணியாவில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஈருருளிகள் வழங்கல்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கிண்ணியாவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஈருருளிகள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

கிண்ணியா அல்.அக்ஸா பாடசாலையில் காலை 10.00 மணிக்கு நடைபெற்ற இந் நிகழ்வில் ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி பிரிவுப் பணிப்பாளர் செ. பாண்டியன் இவற்றினை முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கினார். இப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட 13 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இவ்வாறு ஈருருளிகள் வழங்கப்பட்டதுடன். சுனாமியால் இறந்த ஆசிரியர் ஒருவரின் சகோதரிக்கு ரூபா 15,000 பணமும் வழங்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் முன்பள்ளிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் மேற் கொண்டு வருகின்றனர். அவர்களின் இந் நடவடிக்கை மூவின சமூகங்களையும் திருப்திப்படுத்துவதாக இருக்கின்றது.

இதேவேளை மூதூர் கிழக்கில் பாதிக்கப்பட்ட 21 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கடந்த திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு ஈச்சிலம்பற்று சண்பகா மகாவித்தியாலயத்தில் வைத்து ஈருருளிகள் வழங்கப்பட்டன.

## மருந்துப் பொருள் கையளிப்பு



கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தினரால் ஒருதொகுதி மருந்து வகைகள் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க செயலர் க.கணேஸ மேற்படி மருந்துப்பொதிகளை வைத்தியசாலை மருந்துக் களஞ்சியப் பொறுப்பாளரிடம் மாவட்ட வைத்தியசாலையில் வைத்து கையளிப்பதனைப் படத்தில் காணலாம். (படம்-சோதி)

**-புலிகளின் குரல் நிறுவனத்தின் 2004ஆம் ஆண்டிற்கான-**

## நாளாந்த அவதானிப்பு வினாவிடை போட்டியில் பரிசு பெறுவோர் விபரம்

(அலுவலக செய்தியாளர்)

புலிகளின்குரல் வானொலி நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட 2004 ஆம் ஆண்டிற்கான நாளாந்த அவதானிப்பு வினாவிடைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டுள்ள பரிசுக்குரிய நேயர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தே.தர்சிகா- சிவநகர், புதுக்குடியிருப்பு. அ.கெராட் - மாணவன், புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம். அ.ஜெயரூபன் - மாணவன், புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம். வானதி - சிவநகர், புதுக்குடியிருப்பு. சு.கோகிலா- ஆனந்தபுரம், கிளிநொச்சி. சி. மதுரா கள்ளப்பாடு முல்லைத்தீவு ச.சிந்துநாளன் - திருவையாறு, கிளிநொச்சி. ச.சிந்துஜா -திருவையாறு, கிளிநொச்சி. ச. துகீதரன், திருவையாறு கிளிநொச்சி சி.பத்மநாதன் - புலிமச்சிநாதகுளம், மாங்குளம். ந.இந்துஜா - கிளி/ பிரமந்தனாறு, மகாவித்தியாலய மாணவி. அ.மேரியூஸ்றினா மாணவி, புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம். தே.லதா -புன்னை நீராவி, விசுவமடு. இ.குட்டி- புன்னை நீராவி, விசுவமடு. சு. உதயா - கிளிநொச்சி. சி.குட்டிக்கண்ணன்- கேணல் கிட்டுப் பீரங்கிப்படையணி. புலியரசன் - கேணல் கிட்டு பீரங்கிப்படையணி. ஏ.நம்பி- கேணல கிட்டு பீரங்கிப் படையணி. ச.இ.விநோதன்- லெப் - கேணல் ராதாவான் காப்புப்படையணி. சி.சுதாசீலன் - லெப். கேணல் ராதாவான் காப்புப்படையணி. ஈழக்குகன் - லெப் கேணல் ராதாவான் காப்புப்படையணி. பரிசுக்குரியவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட நேயர்களுக்கான சான்றிதழ்களும், பரிசில்களும் இன்று பி.ப 4.00 மணிக்கு புலி களின்குரல் நடுவப் பணியக அமலன் அரங்கில் நடைபெற வுள்ள கேணல் கிட்டுநினைவு சிறப்பு முத்தமிழ் கலையரங்க நிகழ்வில் வழங்கப்படவுள்ளது. நிகழ்வில் கலந்து கொண்டு தங்களுக்குரிய சான்றிதழ்களையும் பரிசில்களையும் பெற்றுக்கொள்ளும் வண்ணம் புலிகளின்குரல் நிறுவனத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)



சர்வதேச மகளிர்தின நிகழ்வின் போது கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கிளி. அழகியல கலாமன்ற மாணவர்களின் "புதியதோர் உலகம்செய்வோம்" என்ற நாடகத்தின் இரு காட்சிகளை படங்களில்காணலாம்.(படம்-குகன்)


## பூநகரி ப.நோ.கூ.சங்கத்திற்கு புதிய பொது முகாமையாளர்

(அலுவலக செய்தியாளர்)

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க புதிய பொதுமுகாமையாளராக இரத்தினசிங்கம் கடந்த ஏழாம் திகதியன்று பொறுப்பினைக் கையேற்றுக்கொண்டார்.பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளராக இதுவரை காலமும் பதவிவகித்து வந்த ந. பாலசுப் பிரமணியம் தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து மேற்படி இடத்திற்கு து. இரத்தினசிங்கம் நியமிக்கப் பெற்றுள்ளார்.

கடந்த ஏழாம் திகதியன்று சங்க மண்டபத்தில் தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் பிரிவுபசார நிகழ்வும், வரவேற்புபசார நிகழ்வும் இடம் பெற்றது. மேற்படி நிகழ்வில் சங்க நெறியாளர் குழுவினர், அங்கத்தவர்கள், சகல பணியாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# செச்சினிய தீவிரவாதத் தலைவர் மஸ்காடோவ் ரஷ்ய படையினரின் சுற்றிவளைப்புத் தாக்குதலில் பலி!



(மொஸ்கோ)

செசசினய தீவிரவாத இயக்கத் தலைவரான மஸ்காடோவ் (வயது-53) நேற்று முன்தினம் ரஷ்ய படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்டார். குரோஸ்னியில் மறைந்திருப்பதாக கிடைத்த தகவலொன்றைத் தொடர்ந்தே ரஷ்யப் படையினர் தாக்குதலை நடத்தியதாக அறிவிக்கப்படுகின்றது.

செச்சினய தீவிரவாத இயக்கத்தலைவர் அஸ்வான் மஸ்கடோவ் இருந்த இடத்தை ரஷ்யப் படையினர் திடீரெனச் சுற்றிவளைத்தபோது பலமணிநேரம், இருதரப்பினருக்கும் இடையே மோதல்கள் நடைபெற்றன.

ரஷ்ய இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையிலேயே செச்சினிய தீவிரவாதத்தலைவர் கொல்லப்பட்டதாக லண்டனிலுள்ள செச்சினியத் தீவிரவாத இயக்கப்பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

மஸ்கோடோவ் 1997ஆம் ஆண்டில் செச்சினிய சனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு வருடங்களில் பதவி நீக்கப்பட்டார். பின்னர் ஆயுதக்குழுவின் தலைவரானார். மஸ்காடோவ் கடந்த மாதம் ஒரு தலைப்பட்ச போர்நிறுத்தத்தை அறிவித்து ரஷ்ய அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்த முன்வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். எனினும் இவரது கோரிக்கையை ரஷ்ய அரசு நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த பத்து வருட காலமாக செச்சினிய தீவிரவாதிகளுக்கும் ரஷ்ய அரச படையினருக்குமிடையே நடைபெற்றுவரும் மோதல்களில் பொதுமக்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



பாக்தாத்தின் கார்க்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட மையப்பகுதியில் தீச்சுவாலைகளின் மேல் அமெரிக்க உலங்கு வானூர்தி ஒன்று வட்டமிடுகின்றது. குப்பை ஏற்றும் ரக்வண்டி ஒன்றை நேற்று தற்கொலைக் குண்டுத்தாரி செலுத்திவந்து வெடிக்க வைத்ததில் இரு பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டதுடன், 931 பேர் காயமடைந்துமுள்ளனர். இத்தாக்குதல் விவசாய அமைச்சுக்கும் விடுதிக்கும் இடையில் இடம்பெற்றது.

## சுமக்க முடியாத சம்பளம்

சீனாவில் குவார்சவ் என்ற மாகாணத்தில் உள்ள பேருந்துக் கம்பெனியில் சில்லறை நாணயங்கள் ஏராளமாகச் சேர்ந்துவிட்டன. ஆனால் வங்கிகள் இந்த சில்லறை நாணயங்களை வாங்க மறுத்துவிட்டன. இதனால் அந்த பேருந்துக் கம்பெனி,தனது ஊழியர்களுக்கான மாத சம்பளத்தை சில்லறை நாணயமாகவே கொடுத்துவிட்டது. ஒவ்வொரு ஊழியரும் ஆறு கிலோ எடை உள்ள நாணயங்களைச் சம்பளப் பணமாக சுமந்து சென்றனர்.

# ஆசியாவில் ஊழல் மிகுந்த நாடுகள் பட்டியலில் இந்தோனேஷியாவுக்கு முதலிடம்

## ஊழல் குறைந்த நாடாக சிங்கப்பூர் தெரிவு

**ஆசிய நாடுகளிலேயே மிகவும் ஊழல் மிகுந்த நாடுகள் பட்டியலில் இந்தோனேஷியா முதலிடம் பிடித்துள்ளது. இந்தியாவுக்கு நான்காவது இடம் கிடைத்துள்ளது.அரசியல் மற்றும் பொருளாதார இடர் ஆலோசனை நிறுவனம்(பெர்க்) நடத்திய கருத்துக்கணிப்பில் இந்தத் தகவல் கிடைத்துள்ளது.**

ஆசிய நாடுகளில் உள்ள வர்த்தகர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளிடம் இந்தக் கருத்துக்கணிப்பு நடத்தப் பட்டது.இதில் இந்தோனேஷியா உழலால் மிகவும் பாதிக்கப் பட்டிருப்பது தெரியவந்துள்ளது. ஆழிப் பேரலையால் மிகவும் பாதிக்கப்பட்ட இந்நாட்டிற்கு தற்போது சர்வதேச நாடுகளின் நிதிஉதவி பெருமளவு கிடைத்துள்ளது.

இந்தநிதி உதவியை ஆழிப் பேரையால் பாதிக்கப்பட்ட இடங்களில் மறுசீரமைப்பு திட்டங்களுக்கு ஒளிவுமறைவின்றி செலவிட சனாதிபதி சுசீலோ பாம்பங் யுதோயோனோ வழிவகை செய்யவேண்டும் என பெர்க் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஊழலை ஒழிக்க இந்தோனேஷிய சனாதிபதி நடவடிக்கை எடுத்தால் அந்நாட்டின் பொருளாதாரம் உயர வாய்ப்பிருக்கிறது என்று கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்தக் கருத்துக்கணிப்பில் பத்து வரையிலான புள்ளிகளை நிர்ணயித்து ஊழல் மிகுந்த நாடுகளும், ஊழல் குறைந்த நாடுகளும் தரப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி,0.65 புள்ளிகளைப் பெற்று ஊழல் மிகவும் குறைந்த நாடுகள் பட்டியலில் சிங்கப்பூர் முதலிடத்தைப்பிடித்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக ஜப்பான் 3.46 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும்,3.50 புள்ளிகளைப் பெற்று ஹொங்கொங் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன. இந்நாடுகள் வர்த்தகத்துக்கு உகந்தவையாக மதிப்பிடப்பட்டுள்ளன.

இதற்கு அடுத்த படியாக 6.15 புள்ளிகளைப் பெற்று தாய்வானும்,6.50 புள்ளிகளுடன் தென் கொரியாவும் ஓரளவு ஊழல் மிகுந்த நாடுகள் என்ற அந்தஸ்த்தை பெற்றுள்ளன. இந்தப்பட்டியலில் ஊழல் மிகுந்த நாடுகள் என்ற அந்தஸ்தில் இந்தோனேஷியா 9.10 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக பிலிப்பைன்ஸ் (8.80), வியட்நாம் (8.65),இந்தியா (8.63),சீனா(7.68),தாய்லாந்து (7.20)மலேசியா(6.80) ஆகிய நாடுகள் உள்ளன. பெர்க் நிறுவனம் 18 ஆவது ஆண்டாக இந்த கருத்துக்கணிப்பைத்தயாரித்து வெளியிடுள்ளது.




பெய்றூட்டில் சிரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது அமெரிக்க சனாதிபதி புஷ்சின் பெரிய உருவப்டத்தினை லெபனான் இளைஞர்கள் கிழிக்கின்றனர்.



சிரிய இராணு வீரர்கள் பெயரூட் டமஸ்கஸ் வீதியில் டா-அல்-பெய்டா குன்றுகளிலிருந்து மீளப்பெறப்படும்போது வெற்றிக்கு அடையாளமான 'v'குறியினைக் காட்டுகின்றனர்.

## ஈ·ராக் கைதிகள் சித்திரவதை புதிய வீடியோ தொகுப்பு வெளியீடு

ஈராக்கில் ரமடி நகரில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஈராக் வீரர்களை அமெரிக்க இராணுவத்தினர் சித்திரவதை செய்ததற்கான புதிய வீடியோ ஆதாரம் இப்போது கிடைத்துள்ளது.புளோரிடா இராணுவ வீரர்கள் இதைப் படமாக்கி உள்ளனர். கடந்த ஆண்டு சனவரி மாதம்இதை எடிற்செய்து பல்வேறு பகுதிகளாக ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தலைப்பிட்டு ஒரு தொகுப்பாகத் தயாரித்தனர்.

இப்படி ஒரு படத்தொகுப்பு இருப்பதை இராணுவ ஆவணங்கள் தெரிவித்த போதிலும், இது அழிக்கப்பட்டு விட்டதாக இராணுவம் தெரிவித்தது. ஆனால் புளோரிடா நகர செய்தித்தாள் ஒன்று இதைக் கைப்பற்றி,தனக்குச் சொந்தமான இணையத்தளத்தில் வெளியிட்டுயுள்ளது. காயமடைந்த கைதியின் முகத்தில் குத்துவது, இறந்தபோன ஈராக் வீரரின் கையைப் பிடித்து அசைப்பது போன்றவற்றில் அமெரிக்க வீரர்கள் ஈடுபட்டு இருந்ததை இணையதளக்காட்சிகள் சித்தரித்தன.இவை கிரிமினல் நடவடிக்கைகளாக மாட்டாது என்று இராணுவம் கூறியுள்ளது.

# இந்தியப் பெருங்கடலில் ஆதிக்கம் செலுத்த எந்த நாட்டையும் அனுமதிக்க மாட்டோம்

## -பாகிஸ்தான் பிரதமர் அறிவிப்பு

(இஸ்லாமபாத்)

இந்தியப் பெருங்கடலில் எந்தநாடும் ஆதிக்கம் செலுத்த விடமாட்டோம் என்று பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கடற்படை அரபிக் கடலில் சாம்சீர்-இ-பாஹர் என்ற பெயரில் போர்ப் பயிற்சியில் ஈடுபடவுள்ளது. இந்நிலையில் பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அசிஸ் நேற்று முன்தினம் கராச்சி துறைமுகத்திற்கு விஜயம் செய்தார். போர்ப் பயிற்சி குறித்து கடற்படைத்தளபதிகள் அவருக்கு விளக்கினார்கள். பின்னர் அசிஸ். கூறியதாவது,

இந்தியப் பெருங்கடலில் எந்த ஒரு நாட்டையும் ஆதிக்கம் செலுத்த விடமாட்டோம். யார் மீதும் படையெடுக்கும் எண்ணம் பாகிஸ்தானுக்குக் கிடையாது. ஆனால் தற்காப்புக்காக சண்டையிடுவோம். பாதுகாப்பு என்பது பல அடுக்குகள் கொண்ட விடயம் ஆகும். நிதி, பொருளாதாரம், ராஜதந்திரம், தகவல், உளவுப்பிரிவு போன்ற பல விடயங்கள் அதில் அடங்கியுள் ளன. பலுசியஸ்தான் மாநிலத்தில் உள்ள காவ்தர் ஆழக்கடல் துறைமுகத்தைச் சீரமைப்போம். ஆப்கானிஸ்தான், மேற்குசீனா போன்ற கடலற்ற பிராந்தியங்களுக்கு இந்தத் துறைமுகம் மூலம் பொருட்களை அனுப்ப முடியும். இந்தப்பகுதியின் கடல் பாதுகாப்பிலும் காவ்தர் துறைமுகம் முக்கிய பங்கு வகிக்கிறது என்றார்.

## எண்ணெய் வளமிக்க போர்னியோ தீவுக்கான மோதல் அதிகரிப்பு

(ஜகார்த்தா)

எண்ணெய் வளம்மிக்க போர்னியோ தீவுக்காக மலேசியாவுக்கும், இந்தோனேசியாவுக்கும் இடையே மோதல் அதிகமாகியுள்ளது. இந்தோனேஷிய போர் விமானங்கள் தீவைச் சுற்றி வருகின்றன. போர்க் கப்பல்களுமம அனுப்பப்படவுள்ளன.

மலேசியாவுக்கும், இந்தோனேஷியாவுக்கும் இடையிலான கடல் பகுதியில் போர்னியோ என்ற தீவு உள்ளது. இப் பகுதியில் எண்ணெய் வளம் அதிகம் உள்ளது. இத் தீவுக்கு இரு நாடுகளும் உரிமை கொண்டாடுகின்றன. சமீபத்தில் இத் தீவில் எண்ணெய் ஆய்வில் ஈடுபட போலந்து நாட்டைச் சேர்ந்த ராயல்டச்/செல் நிறுவனத்துக்கு மலேசியா உரிமம் வழங்கியது. மலேசியாவின் இச் செயல் இந்தோனேஷியாவில் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

தீவின் மீது தனக்குள்ள உரிமையைக் காட்ட இந்தோனேஷியா தனது நாட்டு எப். 16 போர் விமானங்களை தீவின் மீது பறந்து கண்காணிக்க உத்தரவிட்டுள்ளது. அதன்படி தீவைப் போர் விமானங்கள் சுற்றி வருகின்றன. ஏழு போர்க் கப்பல்களையும் அங்கு அனுப்ப இந்தோனேசியா முடிவு செய்துள்ளது. ராணுவ வீரர்கள் 750 பேர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். மலேசியாவின் செயலைக் கண்டித்து இந்தோனேஷியாவின் பல இடங்களில் மக்கள் போராட்டம் நடத்தினர்.தீவு தொடர்பான பிரச்சினையால் மலேசியா கவலை அடைந்துள்ளது.

# சமாதானப் பேச்சிற்கு உயிரூட்டும் முயற்சியில் நாளுக்கு நாள் சிக்கல் இம்முறையும் எரிக் வெறுங்கையுடன்

**லங்காதீப சிங்கள நாளிதழ் ரஞ்சித் ஆனந்த ஜயசிங்க மொழியாக்கம். அ. சக்திவேல்**

நாட்டில் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்பு சம்பந்தமாக அதன் ஏற்பாட்டாளரான நோர்வே நாட்டிற்கு ஏற்பட்டுள்ள இடையூறுகள் அல்லது பிரச்சினைகள் சம்பந்தமாக விமர்சனம் செய்ய வேண்டிய நிலை யில் நாம் இருக்கின்றோம். நோர்வே சமாதானத் தூதுவர் வடக்குகிழக்கு இனப்பிரச்சினை சம்பந்தமாகக் கலந்துரையாடுவதற்கு கடந்தவாரம் மீண்டும் இந்நாட்டிற்கு வருகை தந்திருந்தார். இம்முறையும் அவரது பிரயாணத்தில் எந்த நன்மைதரும் விடயங்களும் நடைபெறவில்லை.



*1998 ஆம் ஆண்டு முதன் முதலாக நோர்வே நாட்டை சமாதான ஏற்பாட்டாளர்களாக தற்போதைய சனாதிபதி சந்திரிகா அம்மையார் தான் தேர்ந்தெடுத்தார். அப்பொழுது நோர்வே நாடு மத்திய கிழக்கு நாடுகளில் சமாதானத் தூதுவர்களாகக் கடமையாற்றியது. 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அன்றைய அரசுடன் சமாதானப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. அந்தப் பேச்சுவார்த்தைகள் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களை நோர்வேத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் சந்தித்து முதன் முதலாக பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தார். சமா தானப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பது சம்பந்தமாக பச்சை விளக்கு அன்று காட்டப்பட்டது. அதன் பின் கடந்த ஐந்து வருடங்களில் நோர்வே விசேட சமாதானத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் நோர்வே வெளிநாட்டு அமைச்சர் ஜோன்பீற்றர்ஸன், பிரதிவெளி நாட்டமைச்சர் கெல்கீசன் அவர்களும் கட்டம் கட்டமாக வந்து போய்க் கொண்டு இருந் தார்கள்.

முன்னைய நோர்வே உயர்ஸ்தானிகர் ஜோன்வெஸ்பர்க் காலப்பகுதியில் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் காரணமாக நாட்டில் யுத்தம் இல்லாமல் சமாதான நடவடிக்கைகள் ஏற்பட்டன. மக்கள் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டனர். ஆனாலும், அரசுக்கும் புலிகளுக்குமிடையில் சமாதான பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. இப்பேச்சுவார்த்தைகள் வடக்குகிழக்கு அபிவிருத்தி சம்பந்தமாக ஸ்தாபிக்கப்பட்ட சிரான் அமைப்பின் நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடத்தப்படாத காரணத்தாலும், இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக சபை ஒன்றினை அமைப்பதற்கு விடுதலைப்புலிகளினால் அரசுக்கு கோரிக்கை விடுத்தும் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படாத காரணங்களினாலும் இடைநிறுத்தப்பட்டன. சமாதானப் பேச்சுவார்த்தைகளை முற்றாகப் பேசி முடிப்பதற்கும், இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக சபை ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என்ற யோசனையை முதன் முதலில் முன்வைத்தவர் மறைந்த சனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தனா ஆவார். அன்று சார்க் உச்சி மாநாடு பெங்களூரில் நடந்தது. அதில் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக கலந்தாராய்வதற்கு சமாதான சபை ஒன்று தேவையென அன்றைய பிரதமர் ராஜீவ் காந்திக்கு கூறினார். அந்த சமாதான சபைக்கு சனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்த னாவினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியின் பெயரைப் புலிகள் நிராகரித்தபடியால் அன்று இடைக்கால நிர்வாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினை இழுபறி நிலைக்கு தள்ளப்பட்டது.

ஒரு வருடத்தில் பத்து தடவைகளுக்கு அதிகமாக இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கத்துடன் பேசுவதற்கு எரிக்சூல்ஹெய்ம வந்தும் எதுவும் பயன்தராமல் போயிற்று. அரசாங்கத் தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கருத்து வேறு பாடுகளால் எரிக்சூல்ஹெய்முக்கு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாமல் போயிற்று. சுனாமிப் பேரலைகள் அழிவுகளுக்குப் பின் சமாதான முன்னெடுப்பில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வடக்கு கிழக்கில் அதிகளவு சுனாமி பேரழிவுகள் ஏற்பட்டுள்ளதென்பதை சர்வதேச நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. அப்பிரதேசங்களின் அழிவு கணிப்பீடுகளின்படி அரசுக்கு கிடைக்கும் நிவாரணங்களில் 60% சதவீதத்தை வடக்கு கிழக்கிற்கு வழங்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் சபை கணிப்பீடு செய்துள்ளது. இந்நிதி பங்கிடும் பொறுப்பு எரிக்சூல்ஹெய்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



கடந்த வாரம் சூல்ஹெய்ம் அவர்கள் இலங்கைக்கு வந்தது சுனாமி நிவாரணங்களை வடக்கு கிழக்கிற்கு பங்கிடுவதற்கும் இடைக்கால நிர்வாக சபை சம்பந்தமாக அரசுடன் கலந்தாலோசிப்பதற்கே ஆகும். இவைகள் யாவும் மாவட்டங்கள் மூலமாக அமுலப் படுத்தி விடுதலைப் புலிகளுக்கு சமாதான சபையின் தலைமைப் பொறுப்பை வழங்குவதே இவர்களின் திட்டமாகும். இதன் மூலமாக நேரடியாக இச்சபைக்கு நிவாரணங்கள் வழங்குவதற்கு சர்வதேசத்துடன் புலிகளைத் தொடர்பு படுத்துவதற்கே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையின் மூலமாக அதிகாரத்தை பகிர்ந்தளித்து வடக்கு கிழக்கு அபிவிருத்தி இதன் மூல அமுல்படுத்தப்படும்.


இது சம்பந்தமாக பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு வந்துள்ள நோர்வேத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் சுனாமிப் பேரலைகளால் அதிகமாக தென்பகுதியில் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று அங்கு பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடினார். பின்னர் அவர் கண்டி மல்வத்த பீடாதிபதியை சந்தித்தார். அச்சந்திப்பின் போது பீடாதிபதி, நோர்வே விடுதலைப்புலிகளுக்குச் சார்பாக நடந்து கொள்வதாக சுட்டிக்காட்டி உள்ளார். பக்க சார்பற்று நடந்து கொள்ளுமாறு எரிக்சூல் ஹெய்ம் அவர்களுக்கு பீடாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார். இதற்கு முன் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் மல்வத்தை மகாநாயக்கரைச் சந்தித்து இனப்பிரச்சினை சம்பந்தமாக உரையாடுவதற்கு விருப்பம் தெரிவித்தார். இதற்கு பல எதிர்ப்புகள் கிளப்பிய படியால் இச் சந்திப்பு நடை பெறவில்லை என மிக மன வருத்தத்துடன் சூல் ஹொய்ம் அவர்களுக்குக் கூறி உள்ளார்.

இம்முறையும் சூல் ஹெய்ம் அவர்கள் கிளி நொச்சிக்குச் சென்று அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து விட்டு நோர்வே திரும்பிச் சென்றுள்ளார்.

சுனாமி நிவாரணப் பணிகளை துரித கதியில் நடத்துவதற்காக இடைக்கால அபிவிருத்தி சபை ஒன்றை நியமிப்பதே இந்த வருகையின் நோக்கமாக இருந்தது. இந்த இடைக்கால அபிவிருத்தி சபை அமைக்கும் வரை எமது நாட்டுக்கு சர்வதேச உதவிகள் கிடைப்பது மிகத் தாமதமாகும். இது சம்பந்தமாக அரசாங்கம் எந்த முடிவையும் தன்னிச்சையாக அமுல்படுத்த முடியாது. இச் சபை அமைப்பது சம்பந்தமாக முயற்சிகள் பல எடுத்தும் அரசாங்கத்தின் அசமந்தப் போக்கினால் இதை நடைமுறைப் படுத்து வதில் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளதென கிளிநொச்சிக்கு வருகை தந்த நோர்வேத் தூதுவர் எரிக்சூல்ஹய்ம் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இது சம்பந்தமாக சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து வடக்கு கிழக்கு மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொள்வதற்காக ஐரோப்பிய விஜயமொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார். இவ் வருடம் இரண்டு முறைகள் சூல்ஹெய்ம் அவர்கள் இலங்கைக்கு வந்து சென்றுள்ளார். இதில் எந்தப் பலனும் அவருக்கு ஏற்பட[illegible]லை. தற்பொழுது சமாதான முன்[illegible]டுப்புக்கள் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்திற்குள் அதிக கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ள படியால் இது சம்பந்தமாக சமாதான சபையின் செயலாளர் நாயகம் ஜயந்த தனபாலவை அவரது காரியாலயத்தில் எரிக் சூல்ஹய்ம் சந்தித்த பொழுது இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக முன்பு எடுத்துக் கொள்ளப்பட்ட தீர்மானங்களின் படியே பேச்சு வார்த்தைகள் வெகு விரைவில் ஆரம்பமாகுமென நோர்வே சமாதான தூதுவர் எரிக்சூல் ஹய்மிடம் அவர் கூறியுள்ளார்.

தனபாலவின் அறிக்கைக்கு பின் அரசாங்கத்தில் கூட்டாளி கட்சியான ஜே.வி.பி இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் தொடங்கினால் அரசாங்கத்தில் இருந்து விலகப் போவதாக மிரட்டியுள்ளது. அதே போல் இலங்கை இந்திய அரசியல் நிலமை சம்பந்தமாக கதைப்பதற்கு இந்தியா சென்ற வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சமாதானப பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கத் தேவைப்படாது என இந்தியாவிடம் கூறியுள்ளார். ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ அமரசிங்க சமீபத்தில் கதிர்காமரைச் சந்தித்து இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக அரசாங்கம் பேச்சு வாத்தைகள் நடத்துவதை நிறுத்தும்படி கூறிய பின் கதிர்காமர் இக் கருத்தை கூறியுள்ளர்.



ஆனால் சனாதிபதி இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் எந்த மாற்றங்களையும் செய்ய முடியாதெனக் கூறியுள்ளார். இதனால் எரிக்சூல்ஹெய்ம் வெறுங்கையுடன் திரும்பி நோர்வே சென்றுள்ளார். ஆனபடியால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேலும் இழுபறியாகியுள்ளது. இரண்டு வருடங்கள் சமாதானப்பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுள்ளன. எரிக் சூல்ஹய்ம் அன்று தொடக்கம் இன்று வரை சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு உயிரூட்டுவதற்கு மிகவும் முயற்சி செய்து கொண்டு வருகின்றார்.

ஆனால் நாளுக்கு நாள் நூல் பந்தில் சிக்கல் எடுப்பது போல் பேச்சு வார்த்தைகளும் சிக்கலாக இழுபட்ட வண்ணம் உள்ளது. இந்தச் சிக்கல்களை முறையாக அகற்றும் வரை எரிக்சூல் ஹெய்ம் எவ்வளவு முயற்சி செய்தாலும் அதில் பலன் ஏற்படாது

---

# சுனாமியால் பாதிக்கப்பட்ட செம்மலை மக்களுக்கு வெளி நாடுகளில் வாழும் செம்மலை மக்கள் உதவி

(முல்லைத்தீவு)

சுனாமியாலும் போரினாலும் பாதிக்கப்பட்டு தமது பொருளாதாரத்தை இழந்த செம்மலை கிராம மக்களுக்கு செம்மலை கிராமத்திலிருந்து புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் வாழும் மக்கள் பல உதவிகளை வழங்கியுள்ளனர்.

இந் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை செம்மலை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது இக் கிராமத்திலிருந்து புலம்பெயர்ந்து வாழ்கின்ற ரமேஸ் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருட்களை வழங்கினார். இதனடிப்படையில் ஐந்து ஆண்களுக்குரிய ஈருருளிகளும், பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக மூன்று பெண்களுக்கான ஈருருளியும், 10 மாணவர்களுக்கு ரூபா 5000 வீதம் வைப்பில் இடப்பட்ட வங்கி கணக்குப் புத்தகங்கள், இரண்டு பெண்களிற்கு அவர்களது தொழிலை மேம்படுத்துவதற்காக சிறுதொகைப் பணமும், தையல் இயந்திரமும் வழங் கப்பட்டது.

மேலும் இருவருக்கு வியாபார நிலையம் கட்டிக் கொடுப்பதற்கான உறுதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டது. இதனை ரமேசும் அவரது துணைவியாரும் மற்றும், வருகை தந்திருந்த பெரியோர்களும் வழங்கினார்கள். (20)

---

# முல்லை- செல்வபுரத்தில் முன்பள்ளி திறந்து வைப்பு

முல்லைத்தீவு - செல்வபுரம் தற்காலிக குடியிருப்பில் வேள்ட்விஷன் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட முன்பள்ளி கடந்த திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது. முல்லை மக்கள் நலன்புரி சங்கப் பணிப்பாளர் திருமதி மாலினி தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில் மங்கல விளக்கினை அருட்சகோதரி றெஜி ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை வட்டுவாகல் தடை முகாம் காவல் துறை உறுப்பினர் சந்திரசேகர் ஏற்றி வைத்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழக கொடியினை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த டொறின் ஏற்றினார். முன்பள்ளிக் கட்டடத்தை வேள்ட் விஷன் நிறுவனப் பணியாளர் .டெசிகரன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து கருத்துரைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர் .பாலசுப்பிரமணியம், வேள்ட்விஷன் நிறுவனப் பணியாளர் டெசிகரன் பெற்றோர் ஆகியோர் நிகழ்த்தினர். இந்த முன்பள்ளிக்கு நிதியினையும், கற்றல் உபகரணங்களையும், போசாக்கு உணவுகளையும் தளபாடங்கள் போன்றவற்றை வேள்ட்விஷன் நிர்வாகம் வழங்கியுள்ளது. (20)

இந்தச் சவாலை எதிர்கொள்வதற்காக எவரது உதவிகளும் கிடைக்கவில்லை. இந்தநிலையில் எங்களிடம் இருந்த வளங்களைப் பயன்படுத்தி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு விநியோகத்திற்கான பொறுப்பை வழங்கினோம்.

அதேபோல தமிழீழ நிர்வாக சேவையினருக்கு மக்களுக்கான சுத்தமான குடிநீர் வழங்குவது முதல் தண்ணீர் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வதுடன் மலசலகூட ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு அவர்களை நியமித்திருந்தோம்.

தமிழீழ சுகாதாரசேவையினர் மருத்துவ ரீதியான வேலைகளை செய்து கொண்டிருந்த வாழ்வுக்கழகம் உள்ளூரில் இருக்கின்ற பொதுஅமைப்புக்கள் என்பனவற்றினதும் பாதிக்கப்படாத மக்களினதும் ஒத்துழைப்பு போதியளவு கிடைத்தது. அதை வைத்து மக்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்துகொண்டிருந்தோம்.

அதன் பிறகு நான்கு நாட்களின் பின்னர் தான் ஏனையவர்களின் உதவிகள் கிடைத்தன. அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் கிடைத்த பிறகு மக்களுக்கான வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தினோம்.

இந்த நிலையில் நெரிசல் காரணமாக தொற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தது. அதனால் திலீபன் நடவடிக்கைகளில் ஈடு பட்டோம். பாதினாறு இடங்களில் தற்காலிகமாக தங்கவைக்கப் பட்டிருந்த இந்த மக்களை தனித்தனியாக குடியமர்த்த வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தோம்.

அப்போதைய சூழலில் தொற்றுநோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக சிறிய "ரென்ற்" களில் மக்களைக் குடியமர்த்த தீர்மானிததோம். அத்தகைய 'ரென்ற' அமைப்பு எங்கள் சூழலுக்கு ஒத்துவராத நிலை இருந்தது. எனினும் தொற்றுநோய் அபாயத்தைத் தீர்ப்பதற்காக இத்தகைய முடிவுக்குள் தள்ளப்பட்டோம்.

தற்காலிக முகாம்களில் தங்கியிருந்த மக்களின் தேவைகளைச் சரியாக இனங்கண்டு தீர்ப்பதற்கு ஏதுவாக தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரதிநிதி ஒருவரை மக்களைப் பராமரிப்பதற்காக நியமித்தோம். மருத்துவப் பிரச்சினை யைப் பார்ப்பாதற் காக தமிழீழ சுகாதார சேவையினரை நியமித்

களையும் தொற்றுநோய்களின் தாக்கத்தில் இருந்து காப்பாற்றிவிட்டோம் என்பது பெரும் சாதனை என்றுதான் சொல்ல வேண்டும்.

அமைதியான கடற்கரை தான் ஒரு மனிதன் தனது இன்பத்தையும், துன்பத்தையும் சொல்லி மனதை ஆறுதல் கொள்கின்ற அழகான இடமாக இருந்தது. இப்படி மகிழ் வைத்தரக் கூடிய கடலின் மறுபக்கத்தில் ஒரு கோரம இருக்கிறது என்பதை அனை வரும் அறிந்தது இது தான் முதல் தடவை.

கடலை வெறுக்கின்ற, கடல் மீது

## பகுதி-38

எரிச்சலை ஏற்படுத்துகின்ற துயரத்தைப் படைத்து விட்டுப் போய் விட்டது அந்த நாள்.

அன்றைய நாளில் எவருமே வாழ்வைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை. நாங்கள் ஏன் இப் போதும் உயி ருடன் இருக்கிறோம் என்ற விரக்தியின் விளிம்பில் தான் நின்றார்கள். சிலர் எங்களை ஏன் காப்பாற்றினீர்கள் என்று கூடக் கேட்டார்கள் அந்தளவுக்குக் கடல் வெறுப்பாகிவிட்டது.

இந்த இடத்தில் எங்கள் நெஞ்சைக் கலங்க வைத்த சம்பவம் ஒன்றை நினைவுபடுத்த வேண்டும். இனங்கான முடியாத நிலையில் மீட்கப்பட்ட குழந்தைகள், சிறுவாகளின் உடல்களை அடக்கம் செய்கின்ற போது தனியாக அடக்கம் செய்ய எவரும் விரும்ப

**கடந்த 20 வருடங்களுக்கு மேலாக சிங்கள அரசுகள் மேற்கொண்டு வருகின்ற இன அடக்குமுறைகளை யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களைப் பராமரித்து வந்ததால் இந்தப் பெரும் நெருக்கடியைச் சுலபமாகக் கையாள முடிந்தது. அவர்கள் எங்களுக்கு வழங்கிய நீண்டகாலப் பயிற்சியால்தான் மக்களின் துயரை துடைக்க முடிந்தது. பாதிக்கப்பட்டு தற்காலிக முகாம்களில் தங்கியிருந்த மக்கள் அனைவருக்கும் உதவிகள் சரியான முறையிலும் சமமான முறையிலும், கிடைக்கவேண்டும் என்பதற்காக செயலணிக்குழு என்ற ஒரு கட்டமைப்பை நிறுவி அதனுடாக நிவாரணப் பணிகள்,மீள்குடியமர்வு நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டோம்.இந்தக் கட்டமைப்பின் துரிதமான , நேர்மையான செயற்பாட்டால் தான் மக்களின் மனங்களை வெல்ல முடிந்தது என பாதிக்கப்பட்ட மக்களுக்கான வேலைகளை ஒழுங்கு செய்து செயற்படுத்தும் பணியில் ஈடுபட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் தனது அனுபவத்தை எம்முடன் பகிர்ந்து கொண்டார். அவர் பகிர்ந்ததன் தொடர்ச்சி இன்றைய பகுதியில் வருகிறது.**



# தொடர் இடப்பெயர்வுகள் கற்றுத்தந்த பாடத்தால்தான் பேரனர்த்தத்தை இலகுவில் எதிர்கொள்ள முடிந்தது


ருந்தனர். கடலுக்குள் சிக்கி அந்த நீரைப்பருகியவர்கள் அனைவரும் சத்தி எடுத்துக்கொண்டிருந்தனர். அதனால் அவ்வாறான தாக்கங்களில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டிய அவசரதேவை இருந்தது. அதனால் நாங்கள் எவரையும் நம்பி இருக்க முடியாது. அதனால் எங்களது பிரிவுகளே ஒவ்வொரு வேலைகளையும் பொறுப்பேற்றுச் செய்துகொண்டிருந்தன..

இப்படியான இயற்கை அனர்த்தம் எங்களுக்குப் புதியது. ஆனால் இடம் பெயர்ந்த மக்களை அரவணைப்பது எப்படி, அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வது பற்றிய அனுபவம் ஒவ்வொரு போராளிக்கும் பழையதாக இருந்தது. ஏனென்றால் சிங்கள இராணுவம் எங்கள் மக்களைத் தாக்குகின்ற பொழுது அவர்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்கு செல்வார்கள் அவ்வாறு இடம் பெயர்கின்ற மக்களை பராமரிக்கின்ற பொறுப்பு எங்களிடம்தான் இருந்தது. அந்த அனுப வம் இப்படியான பாரிய அழிவில் சிக்கிய மக்களுக்கான அடுத்த கட்ட நடவடிக்கைக ளில் எங்களால் வெற்றிகொள்ள முடிந்தது.

இதற்கான பயிற்சியை சிங்கள அரசிடம் இருந்து கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக நாங்கள் பெற்றிருந்தோம். அதன் மூலம்தான் இந்தஅழிவிலிருந்து மக்களைக் காக்கின்ற பட்டறிவைத் தந்தது.

பாதிப்படைந்திருந்த மக்களுக்கான உடனடித் தேவைகளை தமிழர்புனர்





மருத்துவசேவை, மருத்துவப்பிரிவு, முள்ளியவளை வைத்தியசாலை போன்ற அனைத்து மருத்துவ வளங்களையும் பணியில் இறக்கி நோய்த் தடுப்பு

தோம். தமிழீழ நிர்வாக சேவையினரை குடிநீர், கழிவகற்றல் சேவைகளைச் செய்வதற்காக நியமித்தோம். இத்தனையும் மேற்பார்வை செய்வதற்காக எங்களது போராளி ஒருவரை நியமித்தோம். இவ்வாறு ஒவ்வொரு வேலைகளையும் பிரித்துக் கொடுத்ததால் நெருக்கடி நிலை ஏற்படாமல் தவிர்க்கக் கூடியதாக இருந்தது.

இப்படி இருக்கப் பாதிக்கப்பட்ட அனைத்து உடைமைகளையும் இழந்திருந்த மக்களுக்கு வழங்குவதற்காக பல்வேறு தரப்பிலிருந்தும் வருகின்ற உதவிகள் வெறுமனே ஒரு சிலரை மாத்திரம் சென்றடையாது, பாதிக்கப்பட்ட எல்லா மக்களுக்கும் சமமான முறையில் சென்றடைய வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு செயலணிக்குழுக் கட்டமைப்பை உரு வாக்கி அதனூடாக உதவிகள் பகிர்ந்தளிக் கப்பட்டன.

நாங்கள் அப்படியான கட்டமைப்பு ஒன்றை நிறுவி அதனூடாக வேலைத் திட்டங்களை நகர்த்திக் செல்கின்றபொழுது முழுமையான பயனையும் மக்கள் பெற்றுக் கொண்டனர்.

முல்லைத்தீவிலிருந்து 20 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். இவ்வளவு தொகையானவர்

வேயில்லை.

அதற்காக ஒவ்வொரு சிறுவர்களையும் அங்கிருந்த பெண்களினுடைய உடல்களின் அரவணைப்பில் வைத்து அடக்கம் செய்தோம்.

எதுவும் அறியாத சிறுவர்களின் உடல்கள் எதையும் தனியாக அரவணைப்பில்லாமல் அடக்கம் செய்வதற்கு எவருக்கும் மனம் வரவேயில்லை. அதனால் ஒவ் வொரு தாய்மாரினது அரவணைப்பிலும் சிறுவர்களை அடக்கம் செய்தோம்.

இந்த நிலையில் மக்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக உளவளத் துணையை வழங்க வேண்டிய தேவை இருந்தது.

அ.லோகீசன்

கடலுடன் வீரம் பேசி சவால்விட்டு தொழில் செய்த வீரர்கள் இருந்த நிலம் தான் முல்லைத்தீவு. அப்படியான திறமை மிக்கவர்களாலேயே எதுவும் செய்யமுடியாமல் தங்கள் மனைவி,பிள்ளைகளை பறி கொடுத்துக் காப்பாற்ற முடியாமல் போன சம்பவம் அனைவரையும் உளரீதியாக பெரும்பாதிப்படையச் செய்திருந்தது.

அத்தகைய பாதிப்புக்களை உளவளத் துணை ஊடாக நாங்கள் மாற்றமடையச் செய்திருந்தோம் என்று பாதிக்கப்பட்டு உயிர் தப்பிய மக்களை பராமரிக்கின்ற பாரிய பணியில் ஈடுபட்டிருந்த மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தமது அனுபவத்தை சொல்லி முடித்தார்.

சுனாமியின் பசிக்குள் சிக்கி உருமாறிப் போயிருந்த முல்லைத்தீவில் நான்கு நாட்களாக தொடர்ந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட கட்டளைப்பணியகத்தைச் சேர்ந்த போராளி ஒருவர் சற்று வித்தியாசமான அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். அவர் பகிர்ந்தவை என்ன என்பதை அடுத்த பகுதியில் தருகிறோம்.

தொடரும்...

## முல்லையில் ஆழிப்பேரலைகள் நடத்திய கோரத்தாண்டவம்

# வலிந்து எம் மீது யுத்தம் திணிக்கப்பட்டால் அதனை ஏற்கத் தயாராய் உள்ளோம்

### -திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன்




நாங்கள் தெளிவாகவும், பலத்துடனும் இருக்கின்றோம். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். யுத்தத்தை நாங்கள் விரும்பவில்லை. எங்கள் மீது யுத்தம் வலிந்து திணிக்கப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்வதற்கும் தயாராகவே இருக்கின்றோம். சந்தர்ப்பத்தைச் சரியாக பயன்டுத்துவதில் நாங்கள் குறியாக இருக்கின்றோம்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார். திருகோணமலை மாவட்ட மகளிர் மேம்பாட்டுப்பேரவையினரின் சர்வதேச மகளிர் தின விழா இந்து கலாச்சார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. திருமதி கண்மணி இரத்தினவடிவேல் தலைமையில் நடைபெற்ற இந்நிழ்வில் திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் காருண்யா தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார். இங்கு சிறப்புரையாற்றிய சி.எழிலன் தொடர்ந்து உரையாற்றுகையில், போர் வரக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். இன்னொரு யுத்தம் இந்நாட்டில் ஏற்பட்டால் இலங்கைத்தீவு சுடுகாடாகிவிடும். இதற்கு சிங்கள மக்களுக்கு சிங்கள அரசியல் வாதிகள் பதில் கூறியாகவே வேண்டும். ஆயுதங்களைத் தொடர்ந்து தாங்கி நிற்கும் நிர்ப்பந்தம் எமக்கு இல்லை. சிறிலங்காப் படையினருக்கோ அவர்கள் ஓய்வுபெறும் வரை ஆயுதங்களைத் தாங்கி நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. நாங்கள் எமது மக்களின் விடுதலைக்காகவே ஆயுதங்களைத் தூக்கியவர்கள். எமக்கு விரைவாக மாற்றம் தேவை. விரைவாகப் போராடி தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய தேவைப்பாடு எமக்கு இருப்பதாலேயே நாங்கள் போராட்டத்தின் பால் தள்ளப்பட்டோம். சிறிலங்கா சனாதிபதியும், ஜே.வி.பியினரும் இணைந்து எங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். முன்னைய ஆட்சியாளர்கள் விட்ட தவறே இந்தப் பிரச்சினை தீர்க்கப் படாமல் இருப்பதாகவும், இதனை விரைவில் தீர்க்கப்போவதாக சனாதிபதி தெரிவிக்கும் போதெல்லாம் அதனை ஜே.வி.பி யினர் எதிக்கும் நடைமுறையினைத்தான் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்களுக்குள் ஒரு இணக்கப்பாட்டைக் கொண்டு அதனை வெளியுலகிற்கு எதிர்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

# இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ளோரின் ஆயுதப் புழக்கத்தை இராணுவம் தடுக்க வேண்டும்

### -மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு



மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாகத் தொடரும் படுகொலைகள் தடுக்கப்பட வேண்டுமாயின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள ஆயுததாரிகளின ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு கூறியுள்ளார். விடுதலைப்புலிகள் அல்லாத அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் கொலை செய்யப்படுவதற்கு புலிகள் மீது, இலங்கை இராணுவமும், கொலை செய்யப்பட்டவர்கள் சார்ந்த அமைப்புக்களும் குற்றஞ்சாட்டுவது குறித்து கேட்கப்பட்டதற்குப் பதிலளித்த போதே கேணல் பானு இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் படுகொலைகள் பெரும்பாலும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே நடைபெறுகிறது.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பொதுமக்களிடமும் ஆயுதங்கள் இருக்கிறது, அப்படியான சிலரிடம் இருந்து நாம் ஆயுதங்களை மீட்டு எடுத்துள்ளோம், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அப்படியான ஆயுதங்கள் சிலரால் சுயநலத்துக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆயுதப் புழக்கத்தை இராணுவத்தினர் தடுக்க வேண்டும் என்றும் கூறினார். பொலநறுவைப் பகுதியில் ஆறு விவசாயிகள் சில தினங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கும், தமது அமைப்புக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது என்றும், அது தொடர்பாக இராணுவம் உரிய விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# சமஷ்டி ஆட்சி முறைமைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்பு

சமஷ்டி ஆட்சி முறையை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டு ஆணையாளர் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய அவர், சுனாமியின் பின்னர் இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்து பொதுகட்டமைப்பு ஒன்றை நிறுவவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அதேநேரம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இனரீதியற்ற பங்கீடுஅவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை நேற்று முன்தினம் அவரைச் சந்தித்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் முஸ்லிம்கள் தனித்துவமான இனம் என்பதை சர்வதேசம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.(32)

---

# அம்பாறை பழங்குடியினருக்கு த.புனர்வாழ்வுக் கழகம் உதவி

அம்பாறை மாவட்டத்திலுள்ள அளிக்கம்பைக் கிராமப் பழங்குடி இனத்தவர்களுக்கு அம்பாறை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆடைகளை வழங்கியுள்ளது.

அளிக்கம்பைக் கிராமம் குறவர் இனத்தவரின் பூர்வீகக் கிராமமாகும். இக்கிராம மக்கள் ஏனைய சராசரி மக்களின் பண்பாட்டு வாழ்வியல் நடைமுறை அம்சங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர்களாகவே வாழ்ந்துவருகின்றனர். அவர்களின் பின்தங்கிய வாழ்வியல் நிலைமைகளை அவதானித்த அம்பாறை தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் ஆதவன் அவர்களும், விசேட இணைப்பாளர் செல்வராசா அவர்களும் இரண்டு பாரவூர்திகளில் உடுபுடைவைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தொண்டர்கள் சகிதம் நேரில் கொண்டுசென்று வழங்கியுள்ளனர்.

### -தப்பி ஓடிய இராணுவத்தினருக்கு-

# மீண்டும் ஒருபொது மன்னிப்புக்காலம் சிறிலங்கா அரசாங்கம் தீர்மானம்

சிறிலங்கா இராணுவத்திலிருந்து விலகிச்சென்றவர்கள் சட்ட ரீதியாகத் தமது சேவையிலிருந்து விலகுவதற்காக நாடளாவிய ரீதியிலான மீண்டும் பொது மன்னிப்புக்காலம் ஒன்றை அறிவிக்க சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சேவையிலிருந்து விலகிச் சென்ற பலரிடமிருந்து கிடைத்த கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இராணுவம் சுட்டிக்காட்டியுள்ளது. இது வரை 60,000இற்கும் அதிகமானவர்கள் இராணுவத்திலிருந்து தலைமறைவாகியுள்ளதாக இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் தயாரட்ணாயக்க தெரிவித்தார். இவர்களில் ஏராளமானவர்கள் இடைக்கிடை வழங்கப்பட்ட பொதுமன்னிப்புக் காலத்தின்போது சட்ட ரீதியாக சேவையிலிருந்து விலகிச்சென்றனர். அடுத்த சிலநாட்களுக்குள் இந்தப் பொதுமன்னிப்புக் காலத்தை அறிவிக்கவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உபவேந்தர் மீதான கொலை முயற்சியை கண்டித்து மாணவர் போராட்டம்

தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த செவ்வாய்க் கிழமை கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக பதில் உபவேந்தர் எம்.நசீரின் இல்லம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டையும், அவருக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தலையும் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது,

கடந்த செவ்வாய்க்கிழமை காலை பல்கலைக்கழக முன்றலில் கூடிய மாணவர்கள் அங்கிருந்து வாசக அட்டைகளை ஏந்தியவாறு ஒலுவில் சந்தி வரை சென்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

துப்பாக்கிச்சூட்டில் தொடர்புடைய குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு தண்டனை வழங்கப் பட வேண்டும் என்ற கோரிக்கையையும் மாணவர்கள் முன்வைத்திருந்தனர்.

கடந்த வாரம் நடந்த உபவேந்தரின் இல்லம்மீதான தாக்குதலின் போது பதவி விலக வேண்டும் என்ற அச்சுறுத்தல் கடிதமொன்றை வெள்ளைப் புடவை விரித்து அதன் மேல் வைத்துவிட்டு ஆயுதக் கும்பல் தப்பிச் சென்றது என்பதும் குறிப்பிடத் தக்கது.

# மன்னாரில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வு

(மன்னார்)

மன்னாரில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

கத்தோலிக்க மகளிர் பண்பாட்டுக் குழுவினரால் மகளிர் தின விழா மன்னார் தூயசெபஸ்தியார் தேவாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பெருந் தொகையான பெண்கள் வருகை தந்திருந்தனர்.

காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகிய நிகழ்வில் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றியிருந் தனர். தொடர்ந்து பல கலைநிகழ்வுகள் இடம் பெற்றன. (மி)

### கும்பாபிஷேகத் திருவிழா

மல்லாவி வைத்தியசாலையில் ஆரோக்கிய சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகத் திருவிழா நேற்றுக்காலை 7.00 மணிக்கு அலங்கார உற்சவத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்து நாள் திருவிழாவுடன் 18 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 10.00 மணிக்கு கும்பாபிஷேக நிகழ்வும், அன்ன தான நிகழ் வும் நடைபெறவுள்ளது. (24)

# சாவு அறிவித்தல்



## சின்னத்தம்பி செல்லையா

கிழவி தோட்டம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகச் கொண்டவரும், இலக்கம் 154/2 முரசுமோட்டையை வதிவிடமாகக் கொண்டவரும், கரவெட்டிச் செல்லையா என அழைக்கப்படுபவருமாகிய திரு.சின்னத்தம்பி செல்லையா அவர்கள் 08.03.2005 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10.03.2005 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது முரசுமோட்டை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முரசுமோட்டை ஐயன்கோயில் அருகாமை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் ஆகியோரை ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகின்றோம்.

தகவல் :-செ.ஜெயராசா (மகன்)
சு.சந்திரபாலா (மருமகன்)
154/2 முரசுமோட்டை.

( 5781 )

# தமிழ் நாடு மீனவர் சங்கத்தலைவர் சிறிலங்கா படையினருடன் பேச்சு

(கொழும்பு)

வடக்கில் அடிக்கடி இந்திய மீனவர்களுக்கும், தமிழ் மீனவர்களுக்கும் மீன்பிடி சம்பந்தமாக மோதல்கள் ஏற்பட்டு வருவதால் இம்மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தமிழ்நாடு ஐக்கிய மீனவ சங்கத்தின் தலைவர் நாகேஸ்வரன் தற்பொழுது வடக்கிற்கு வருகை தந்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் துன்புறுத்தப் படுதல், அவர்களைக் கைது செய்து இலங்கைச் சிறைகளில் தடுத்து வைத்திருப்பது சம்பந்தமாக இலங்கை வடக்குப் பாதுகாப்புப் படையினருடன் பேச்சுவார்த்தைகளையும் அவர் நடத்தியுள்ளதாக திவயின சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# இந்-இராணுவத்தை அவமதித்தது யார்? ஜெயலலிதா-கருணாநிதி பரஸ்பரம் குற்றச்சாட்டு!

## -சட்டசபையில் பெரும் அமளி, துமளி!

(சென்னை)

தமிழக அரசின் 2005/2006 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் சட்டசபையிலே நடைபெற்றபோது இந்திய இராணுவத்தை கருணாநிதி தான் அவமானப்படுத்தியவர் என தமிழக முதல்வர் ஜெயலலிதா குற்றஞ் சுமத்தினார்.

இந்திய இராணுவம் இலங்கைக்குச் சென்றுவிட்டு மீண்டும் நாடு திரும்பியபோது இந்திய அமைதிப் படையை வரவேற்கச்செல்லாதவர் தி.மு.க தலைவர் கருணாநிதி. இதன் மூலம் அவர் இராணுவத்தைக் கேவலப்படுத்தியும் அவமானப்படுத்தியும் உள்ளார். இந்த நிலையில் அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் இராணுவத்திற்காக வக்காலத்து வாங்குவது வேடிக்கையாகவுள்ளது.

நான் ஏதோ தவறான கருத்தைச் சொன்னதாக உண்மைக்கு மாறான தோற்றத்தை உருவாக்கப்பார்க்கிறார்கள். இராணுவத்தின் மீது எனக்கு எப்போதும் மதிப்பும், மரியாதையும் உள்ளது. நான் ராஜ்ய சபா உறுப்பினராக இருந்த பொழுது இராணுவத்தின் கோரிக்கைகளை வலியுறுத்தி இரண்டு நாட்கள் உரையாற்றினேன். அதைத் தொடர்ந்து தான் இராணுவத்திற்கு சம்பளமும், பல படிகளும் வழங்கப்பட்டது எனக்கூறினார் செல்வி ஜெயலலிதா.

சுனாமிப் பேரலைகளினால் அழிவுற்ற இடங்களில் மீட்புப்பணிகள் மற்றும் நிவாரணப்பணிகள் நடந்த போது அழுகிப்போய் துர்நாற்றம் வீசிய பிணங்களைத் தொட இராணுவம் மறுத்துவிட்டது என ஜெயலலிதா குற்றஞ் சுமத்தியிருந்தது தெரிந்ததே. இந்த விவகாரத்தையே எதிர்க்கட்சியினர் ஜெயலலிதா இராணுவம் குறித்து அவதூறான கருத்தை வெளியிட்டார் எனக் கருத்துத் தெரிவித்த போது, பதிலளித்துப் பேசிய ஜெயலலிதா மேற்படி கருத்தை கருணாநிதி மீது சுமத்தினார்.

இது தொடர்பாக இடம் பெற்ற விவாதங்களின் போது சட்டமன்றத்திலே பெரும் அமளிதுமளியேற்பட்டது. எதிர்க்கட்சியினர் அவையை நடத்த விடாமல் கடுமையான கூச்சல் குழப்பம் போட்டதால் எதிர்க்கட்சியான தி.மு.க உறுப்பினர்கள் அனைவரையும் சபாநாயகர் வெளியேற்றினார். இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சியை சபையிலே அனுமதிக்கும் படி கோரி பாட்டாளி மக்கள் கட்சியினரும் வெளி நடப்புச் செய்தனர்.

இதேவேளை ஜெயலலிதாவின் இராணுவம் மீதான குற்றச்சாட்டையும் கருணாநிதி மீதான குற்றச்சாட்டையும் கண்டித்து எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி மீண்டும் ஓர் அறிக்கையை விடுத்துள்ளார். இராணுவத்தைக் குற்றஞ்சுமத்தி சட்டசபையிலேயே பேசியதன் மூலம் தன் சுயரூபத்தைக் காட்டிவிட்டார் என்றும், ஜெயலலிதா இராணுவத்தினர் மீது சுமத்திய குற்றச்சாட்டிற்கு பாதுகாப்புத் துறையின் சார்பில் லெப்.ஜெனரல் சோப்ரா மறுப்பு அறிக்கை விடப்பட்டு சகல பத்திரிகைகளிலும் வந்த போதிலும் அதற்கான பதிலை ஜெயலலிதா வழங்கவில்லை. அதாவது ராணுவம் சுனாமியால் பாதிக்கப்பட்ட சகல இடங்களிலும் அழுகிய சடலங்களை மீட்டதாகவும் அதற்கு புகைப்படங்களுடன் கூடிய ஆதாரமும் இருப்பதாக வெளியிட்டிருந்தார்.

நிலைமை இவ்வாறிருக்க, 15 வருடங்களுக்கு முன்பு இலங்கை சென்ற இந்திய இராணுவத்தை வரவேற்கவில்லை என்று பிரச்சினையை திசை திருப்பப் பார்க்கிறார். அத்துடன் சட்டசபையிலே எதிர்க்கட்சியினரை வெளியேற்றி சனநாயகத்தையும் குழிதோண்டிப் புதைத்துள்ளார் எனவும் கருணாநிதி தனது கண்டன அறிக்கையிலேயே தெரிவித்துள்ளார்.

# இந்திய இராணுவக்கல்லூரியை தாக்கத்திட்டமிட்டிருந்த "லஸ்கர்-இ.தொய்பா" இயக்கத் தீவிரவாதிகள் கைது!

(புதுடில்லி)

பெங்களூரில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்த தீவிரவாதிகள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

பாகிஸ்தானில் இருந்து செயற்படும் லஸ்கர்-இ-தொய்பா இயக்கத்தைச் சேர்ந்த இரு தீவிரவாதிகளை வெடிபொருட்களுடன் டில்லியில் வைத்து கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களை விசாரணை செய்த பொலிசார் அவர்கள் கொடுத்த தகவலின் படி புதுடில்லியின் சுரஜ்விகார் பகுதியில் பதுங்கியிருந்த மேலும் மூன்று தீவிரவாதிகளை சுற்றி வளைத்து சுட்டுக்கொன்றனர். இவர்கள் பெங்களூரில் உள்ள பிரபல தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களையும் மற்றும் பல முக்கிய இடங்களையும் தாக்குவதற்குத் திட்டம் தீட்டியிருந்தது தெரிய வந்துள்ளது.

இதேவேளை உத்தராஞ்சல் மாநிலத்தின் டேராடூனில் வைத்து லஸ்கர் இ.தொய்பா இயக்கத்தைச் சேர்ந்த மேலும் ஒரு தீவிரவாதி கைது செய்யப்பட்டார். முகமது இப்திகார் எக்சன் எனப்படும் இத் தீவிரவாதி பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர். இவர் இந்திய இராணுவக் கல்லூரி தொடர்பான தகவல்களை டில்லியில் இருந்த தீவரவாதிகளுக்கு அனுப்பி வந்துள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிசார் டில்லியில் நடத்தி வருகின்றனர்.

# இந்தியாவிலே மிகச் சிறந்த காவல்துறை தமிழ்நாட்டிலே தான் உள்ளது- ஜெயலலிதா!

(சென்னை)

காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் கர்நாடகம், ஆந்திரா மாநிலங்களிலிருந்து நக்சலைட் தீவிரவாதிகள் தமிழ் நாட்டுக்குள்ளும் ஊடுருவும் ஆபத்து உள்ளதாகவும், அதனைத் தடுக்க தாம் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் முதலமைச்சர் ஜெயலலிதா சட்ட சபையிலே தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் சட்ட சபையிலே நடைபெற்ற போது தமிழ் நாட்டிலே துப்பாக்கி மற்றும் வெடிகுண்டுக் கலாச்சாரம் அதிகரித்துக் கொண்டிருப்பதாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஞானசேகரன் கூறியதற்குப் பதிலளித்துப் பேசிய போதே ஜெயலலிதா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தமிழ் நாட்டில் வெடிகுண்டுக் கலாச்சாரம் பரவி விட்டது பற்றி கூறுவது வியப்பாகவுள்ளது. ஏனெனில் காங்கிரஸ் கட்சியினரின் ஆட்சி நடைபெறும் ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களிலேயே நக்சலைட் தீவிரவாதிகள் தினந்தோறும் அப்பாவிப் பொது மக்களையும் காவல்துறையினரையும் கொன்று குவித்துக் கொண்டு வருகிறார்கள். வேண்டப்படாதவர்களுடன் கூட்டுச் சேர்ந்து ஒழுங்கற்ற நிர்வாகம் தான் அங்கு நடைபெறுகின்றது. ஆனால் தமிழ் நாட்டிலே நக்சலைட்டுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக சட்டம் ஒழுங்கு அனுசரிக்கப்படுவதும் மிகச் சிறந்த காவல்துறையும் தமிழ் நாட்டிலேதான் இருக்கிறது. என்றும் ஜெயலலிதா மேலும் கூறினார்.

# மிக்-21 ரக விமானம் வீழ்ந்து நொருங்கியது!

ராஜஸ்தானின் பீகானீர் விமானத் தளத்தில் இருந்து வழக்கமான பயிற்சிக்காக புறப்பட்டுச்சென்ற இந்திய விமானப்படையைச் சேர்ந்த 'மிக் 21'ரக விமானம் தரை இறங்கும் போது விமான ஓடு பாதையில் விழுந்து நொருங்கியுள்ளது. இதில் விமானி அதேஇடத்தில் பலியானார். இதன்போது விமான ஓடுபாதையில் பணிபுரிந்து கொண்டிருந்த ஏழு தொழிலாளர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் மூன்று பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

### பிரதமர் மன்மோகன் சிங் சனாதிபதியுடன் சந்திப்பு

பிரதமர் மன்மோகன்சிங் நேற்று முன்தினம் சனாதிபதி மாளிக்கைக்குச்சென்று சனாதிபதி அப்துல்கலாமை சந்தித்துப் பேசினார். 30 நிமிடம் நடைபெற்ற இச்சந்திப்பில் கோவா, பீகார் ஆகிய மாநிலங்களில் சனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்பட்டு இருப்பது மற்றும் தேசிய சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும் கிராமப்புற அபிவிருத்தி குறித் தும் அவர்கள் ஆலோசனை நடத்தியதாக சனாதிபதி மாளி கையின் செய்தித்தொடர்பாளர் எஸ்.எம். கான் தெரிவித்துள்ளார்.

### தண்டி யாத்திரை

கர்நாடக மாநிலத்தில் எதிர் வரும் 12 ஆம் திகதி தண்டி யாத்திரை இடம் பெறவுள்ளது.

மகாத்மாகாந்தியின் தலைமையில் நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரக பேராட்டத்தின் 75 ஆவது ஆண்டு நினைவு தினத்தைக் கொண்டாடும் முகமாக நடைபெறும் இந்த நிகழ்ச்சிகளில் சுமார் 386 கிலோ மீற்றர் பாத யாத்திரை இடம் பெறவுள்ளது. அகில இந்திய காங் கிரஸ் கட்சி சார்பில் ஏற்பாடு செய்யப்படும் இந்த நிகழ்ச்சிகளில் பாத யாத்திரையை கட்சித் தலைவி சோனியா காந்தி ஆரம்பித்து வைக்கவுள்ளார். மகாத்மாகாந்தியின் தலைமையில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் மிக்க இந்த நிகழ்ச்சியை நினைவுகூரும் முகமாக நடைபெறும் பாதயாத்திரையில் அனைத்து மாநிலங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.


## 02 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாய்மடி மலர்வில்
20 * 10 * 1980



சர்வதேசக் கடற்பரப்பில்
10 * 03 * 2003

### ஒயிலர் தூயவன்
பிரான்சிஸ் சந்திரா சர்வானந்தா

தாய் மண்ணில் பாசம் வைத்து
தன்னுயிர் கொடுத்த மாவீரனே
ஆண்டு இரண்டானாலும்
அழியாது உன் இலட்சியக்கனவு

எமது சோழன் சி.க.உ.கூ. சங்கத்தின் செயலாளர் அ.பி.சந்திரா அவர்களின் மகன் சர்வானந்தா அவர்களின் 2 ஆம் ஆண்டுநினைவு நாளில் நாமும் எமது இதய அஞ்சலியைச்செலுத்தி நினைவு கூருகின்றோம்.

இவருடன் வீரகாவியமான ஏனைய மாவீரர்களுக்கும் எமது இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

நிர்வாகமும், அங்கத்துவர்களும்,
சோழன் சி.க.உ.கூ.சங்கம்,
திருவையாறு.

( 5782 )



## இலங்கை வங்கி
## அறிவித்தல்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளைச் சார்ந்த அனைத்து வாடிக்கையாளர்களுக்குமானது.

ஆவணங்கள் பழுதடைந்திருப்பின் அல்லது அழிக்கப்பட்டிருப்பின் தயவு செய்து, பின்வரும் பதிற் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக உங்களுடைய இலங்கை வங்கிக் கிளை முகாமையாளரைச் சந்திக்கவும்.

* சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள்
* நிரந்தர வைப்புப் பற்றுச் சீட்டுக்கள்
* காசோலைப் புத்தகங்கள்

அல்லது வேறேனும் வங்கியுடன் தொடர்புடைய ஆவணங்கள்.


BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

( 11384 )

# கென்ய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளருக்கு தொலைபேசி மிரட்டல்



கென்ய கிரிக்கெட் அணி பயிற்றுநரான அன்டி மோல் தனக்கு அனாமதேய தொலைபேசி மிரட்டல் வந்தது பற்றி தகவல் வெளியிட்டுள்ளார்.
ஸ்கொட்லாந்தைச்சேர்ந்த மோல் இவ்வருட முற்பகுதியில் தனது பணியிலிருந்து இராஜினாமா செய்தார். அவர் தற்போது பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் அப்போது அவருக்கு கிடைத்த அநாமதேய மிரட்டலால் தான் அச்சமடைந்ததாக தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கும் போது;தான் பணியில் இருக்கும் போது அணிக்கான கொடுப்பனவுகள் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை எனவும் அவர்கள் கிரிக்கெட் சபையுடன் முரண்படுவதாகவும் போட்டிகளை பகிஷ்கரித்ததாகவும் குறிப்பிட்டார்.



எவ்வாறெனினும் வீரர்களுக்கும், அதிகாரிகளுக்குமிடையில் பேச்சுக்கள் நடைபெற்று சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளும் என தான் நம்புவதாகவும் அணிவீரர்கள் திறமையானவர்கள் என்றும் 2003 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் அரையிறுதிவரை முன்னேறியதையும் நினைவுபடுத்தினார். அத்துடன் அரசியல் தலையீடுகளும் இதற்கு காரணமென அவர் வலியுறுத்தினார்.

# ஐந்து விக்கெட்டை கைப்பற்றியது மகிழ்ச்சியாய் உள்ளது – பாலாஜி



பாகிஸ்தானுடனான மோதலில் ஐந்து விக்கெட்டுக்களை சாய்த்தது மகிழ்ச்சியை அளிப்பதாக பாலாஜி கூறியுள்ளார். இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் முதல் டெஸ்ட் கிரிக்கெட் மொகாலியில் நடக்கிறது. இந்தப் போட்டிக்கான முதல்நாள் ஆட்டத்தில் இந்திய வேகப் பந்து வீச்சாளர் பாலாஜி ஐந்து விக்கெட்டை கைப்பற்றினார். கடந்த செப்ரெம்பர் மாதம் சம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியின்போது வயிற்றுத் தசை பிடிப்பு காரணமாக அணியிலிருந்து விலகினார். இதன்பின்னர். நீண்ட ஓய்வில் இருந்த பாலாஜி பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரின் போது வாய்ப்புப் பெற்றார். முதல் டெஸ்ட் போட்டியிலேயே ஐந்து விக்கெட்டை சாய்த்திருப்பது.மகிழ்ச்சி அளிக்கிறது என்று பாலாஜி கூறினார். இதுதொடர்பாக மேலும் அவர் கூறுகையில்,பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடர் பதட்டம் நிறைந்தது. சரியான நேரத்தில் நான் டெஸ்ட் போட்டியில் சாதித்து இருக்கிறேன். சாதிக்க வேண்டிய கட்டாயத்தில் களம் இறங்கியதால் தான் என்னால் இந்தப் போட்டியில் சிறப்பாக பந்துவீச முடிந்தது. இந்தமுறை நான் நீண்ட காலம் ஓய்வில் இருந்தேன். அணியில் இடம்பிடிக்க அளவுக்கு அதிகமாக உழைத்தேன் என்றார்.


## பார்சிலோனாவை வீழ்த்தியது செல்சியா



சம்பியன் லீக் கால்பந்தாட்டப் போட்டியில் செல்சியா அணி பார்சிலோனா அணியை ஐந்துக்கு நான்கு என்ற கோல் கணக்கில் வென்று கடைசி எட்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. அவ்வணியின் எல்டர் குஜோன்சன், பிரானப், லம்பார்ட் ஆகியோர் வேகமாக 19 நிமிடத்தில் தலா ஒரு கோலை அடித்தனர்.

எனினும் பார்சிலோனா முதல் பாதிக்கு முன் இரண்டு கோல்களைப் போட்டது. டெரி முதலாவதுகோலையும் ,றொனால்டினோ இரண்டாவது கோலையும் போட்டனர். பின்னர் இடைவேளைக்கு சற்று முன்னர் றொனால்டினோ மேலும் ஒரு கோலை அடிக்க செல்சியா பின் தள்ளப்பட்டது. இருப்பினும் இறுதிப்பாதியில் செல்சியா வீரர்களின் கை ஓங்கியது. ஆட்டம் முடிய 18 நிமிடமிருக்கும் போது மேலும் இரண்டு கோல்களையடித்து செல்சியா வெற்றி பெற்றது.

# மொகாலி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி; இந்திய வீரர்கள் அதிரடி துடுப்பாட்டம்




இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் மொகாலியில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வலுவான நிலையில் உள்ளது.

போட்டியின் இரண்டாம் நாளான நேற்று மழை போட்டியை பாதித்த போதும் மாலை 2.20 மணிக்கு போட்டி ஆரம்பமானது. ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிய இந்திய வீரர்கள் 40 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி ஒரு விக்கெட்டை இழந்து 184 ஓட்டங்களை குவித்தனர்.

இரண்டாவது நாளான நேற்று இந்தியா முதல் இன்னிங்சை தொடங்க இருந்தது. ஆனால் மழை தூறல் காரணமாக போட்டி திட்டமிட்டபடி காலை 10 மணிக்கு தொடங்கவில்லை. காலை 7-30 மணியளவில் மொகாலியில் மழை பெய்தது. ஆடுகளத்தில் தண்ணீர் தேங்கியது. இதனால் போட்டி தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. மதிய உணவு இடைவேளைக்கு பிறகாவது போட்டி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து மழை தூறல் இருந்ததால் போட்டி தொடங்க முடியாத நிலை ஏற்பட்டது.

மழையால் போட்டி பாதிக்கப்பட்டதால் போட்டியை காண வந்த இந்திய-பாகிஸ்தான் ரசிகர்கள் மிகவும் ஏமாற்றம் அடைந்தனர். 1.30 மணியளவில் மழை நின்றது. இதைத் தொடர்ந்து ஆடுகளத்தை பார்வையிட்ட நடுவர்கள் 2.20 மணிக்கு போட்டி தொடங்கும் என்று அறிவித்தனர். சேவாக்கும், கம்பீரும் தொடக்க வீரர்களாக களமிறங்கினர். இருவரும் தொடக்கம் முதல் ஒரு நாள் போட்டி போல் அதிரடியாக விளையாடி ஓட்டங்களை குவித்தனர். குறிப்பாக சேவாக் அதிரடியாக விளையாடினார். இதனால் இந்தியா 8.3 ஓவரில் 50 ஓட்டங்களை தொட்டது. அதனை தொடர்ந்து சேவாக் 49 பந்தில் அரைச்சதம் அடித்தார்.



இருவரும் சிறப்பாக விளையாடினர் இதனால் இந்தியா 15.5 ஓவரில் 100 ஓட்டங்களை தொட்டது. இந்திய அணியின் ஓட்டம் 113 ஆக இருக்கும் போது கனேரியா பந்தில் கவுதம் கம்பீர் 41 ஓட்டத்துடன் நவீத் உல்ஹசனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து ராவிட் களம் இறங்கினார். இரண்டு பேரும் ஆட்டம் இழக்காமல் நிதானமாக விளையாடினார்.இந்தியா 40 ஓவரில் 184 ஓட்டம் இருக்கும் போது வெளிச்சம் இல்லாத காரணத்தினால் இரண்டாவது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. சேவாக் 95 ஓட்டத்துடனும்,ராவிட் 39 ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். இன்று மூன்றாம் நாள் ஆட்டம் காலை 10.00 மணிக்குத் தொடங்கும். பாகிஸ்தான் முதல் இன்னிங்சில் 312 ஓட்டங்களைப் பெற்றது.



# அவுஸ்-நியூசிலாந்துக்கிடையிலான முதல் டெஸ் போட்டி இன்று ஆரம்பம்




பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான ஐந்து ஒருநாள் போட்டியிலும் அவுஸ்திரேலியா வென்று தொடரை கைப்பற்றியது.

இந்த நிலையில் மூன்று போட்டிகொண்ட டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் கிறிஸ்ட் சர்ச் நகரில் இன்று தொடங்குகிறது. ஒரு நாள் தொடரை மிகவும் மோசமாக இழந்த நியூசிலாந்து டெஸ்ட் தொடரை கைப்பற்ற போராடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் நியூசி லாந்து அணியில் பலமாற்றங்கள் நிகழலாம்.



*மான்செஸ்டர் அணி வீரர் டேனி மில்ஸ் (இடது) வேகமாக பந்தை உதைக்க முயல தடுக்க வந்த பால்டன் அணி வீரர் எல்-ஹட்ஜி டியோப் நிலை தடுமாறுகிறார். இந்த போட்டியில் 1–0 என்ற கோல் கணக்கில் பால்டன் வென்றது.*

# விளையாட்டு உத்தியோகத்தர்களின் நலன்களை கவனிக்க புதிய தொழிற்சங்கம் அங்குரார்ப்பணம்

வடக்குக் கிழக்கில் கடமையாற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்களின் தொழில்சார் நலன்களைக் கவனிக்க புதிய தொழிற்சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

தொழிற்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் றோகான் இராஜசிங்கம் தலைமையில் திருமலை துளசிபுரத்தில் அமைந்துள்ள மனிதவலு அபிவிருத்தி நிலையத்தில் இடம் பெற்றது. ஏற்கனவே தொழிற்சங்கத்தை உருவாக்க வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்ட தற்காலிக நிர்வாகக் குழுவை புதிய நிர்வாகக் குழுவாக தெரிவு செய்ய வேண்டுமெனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இக்கோரிக்கைக்கு ஒரு சிலர் எதிர்ப்புக் காட்டியதைத் தொடர்ந்து இத்தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு பெரும்பான்மை வாக்குகளுடன் இத்தீர்மானம் வெற்றிபெற்றது.

இதனைத் தொடர்ந்து தலைவராக வவுனியா மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் என். அண்ணாத்துரையும், செயலாளராக திருமலை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஜஸ்ரின் பெரேராவும், பொருளாளராக மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் யாக்கத் அலியும் தெரிவு செய்யப்பட்டனர்.மற்றும் மாவட்டத்திற்கான பிரதிநிதிகள் உட்பட ஏனைய நிர்வாகத்தினரும் தெரிவு செய்யப்பட்டனர். (41)

# பிரதேச செயலர் பிரிவு ரீதியாக விளையாட்டுப் போட்டி நடத்த ஏற்பாடு


தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட வுள்ளன.

போட்டிகள் நடத்துவது சம்பந்தமான சுற்று நிருபங்கள் கொழும்பில் உள்ள தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தினால் அனைத்து மாவட்ட இளைஞர்கள் சேவைகள் உத்தியோகத்தர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக யாழ்.குடாநாட்டில் இப்போட்டிகள் இடம்பெறாத போதிலும் அதற்கு முன்னர் இப்போட்டிகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக பதிவுசெய்யப்பட்ட இளைஞர் சேவைகள் மன்றங்களின் உறுப்பினர்களுக்கு இடையே இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன. (41)

## சிந்தனைக்கு



எமது பண்பாடுதான் எமது தேசத்தின் உயிர்; எமது இனத்தின் ஆன்மா

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 10-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

## வேண்டாம் எனக் கூறுவது தானே!

இலங்கைக்குத் தேவையான பெருமளவு பொருட்கள் ஜீ-7 நாடுகளில் இருந்தே கொண்டு வரப்படுகின்றன. இது சமூக பொருளாதார ரீதியில் இலங்கைக்கு அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன என்ற ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்சவின் கூற்றுக்கள் எந்தளவிற்கு மக்களை ஏமாற்ற முடியும் என ஜே.வி.பி யினர் மனம் கொண்டுள்ளனர் என்ற எல்லையைக் காட்டுவதாகவே உள்ளது.

ஜே.வி.பி யினர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் தேர்தல் உடன்பாட்டிற்கு வரும்போதே இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை அமுலில் இருந்தது என்பது மட்டுமல்ல சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்களின் செல்வாக்கும் உயர் நிலையில் இருந்ததென்பதும் நிதர்சனமானதாக இருந்தது.

ஆனால் அன்று ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்காக சுதந்திரக் கட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் இவ் விடயங்கள் எதனையும் ஜே.வி.பி வற்புறுத்தவில்லை. அதாவது திறந்த பொருளாதாரக் கொள்கைமாற்றம் குறித்தோ, அன்றி சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவிகளை மட்டுப்படுத்துதல் குறித்தோ எந்தக் குறிப்பும் இடம் பெறவில்லை .

இதே சமயம் இதற்கு முன் ஆட்சி அதிகாரத்தில் இருந்து வந்த பொ.ஐ முன்னணி அரசாங்கமும், தனியார் மயமாக்கலையும் அதற்கான உத்தரவாதத்தையும் அளித்திருந்தது. ஆகையினால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒப்பந்தம் செய்யும் முன்னரே இத்தகையதொரு பொருளாதார ஒழுங்கிலேயே அரசாங்கத்தை நடத்திச் செல்ல முடியும் என உணரப்பட்டிருந்தது. இது ஜே.வி.பிக்கும் தெரியாததொன்றல்ல.

ஆயினும் அன்று ஜே.வி.பி இத்தகைய முரண்பாடு எதையும் பொருட்படுத்தியதாக இல்லை. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்பதில் மட்டுமே அது குறியாக இருந்தது. எத்தகைய முரண்பாடு இருப்பினும் மீண்டும் ஐ.தே.கட்சியை ஆட்சி அதிகாரத்திற்கு வரவிடாது தடுத்தல் என்பதே அவர்களின் ஒரே ஒரு குறிக்கோளாக இருந்தது.

இவை ஒரு புறம் இருக்க சுனாமியினால் நாட்டிற்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டபோது சர்வதேச நாடுகள் பல உதவியளிக்க முன் வந்தன. பெருமளவு நிவாரணப் பொருட்களையும் அனுப்பின. அவ் வேளையிலும், ஜே.வி.பி யினர் உதவி வழங்குவோருக்கு எதிராக எந்தவொரு நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை. சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொண்டது மட்டுமல்ல அவற்றைத் தமது கட்சியின் பெயரில் விநியோகம் செய்து குறுக்கு வழியில் அரசியல் ஆதாயம் தேடவே முற்பட்டு நின்றனர். குறிப்பாகச் சுட்டிக் காட்டுவதனால் சனாதிபதி சந்திரிகா அதிருப்தி அடையும் அளவில் கூட அவர்கள் நடந்து கொண்டார்கள்.

அதாவது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச்சேரும் பொழுதும், அன்றி நிவாரண உதவிகளை மேற்குலகில் இருந்து கைநீட்டிப் பெற்றுக் கொள்ளும் பொழுதும் கொள்கைக் கோட்பாடுகளை மறந்து போன ஜே.வி.பி யினர் தற்பொழுது ஜீ-7 நாடுகள் தமது பொருட்களையே அனுப்புகின்றன எனவும் சமூக பொருளாதார ரீதியில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கின்றன எனவும் கூறுவது ஒரு புறத்தில் வேடிக்கையாகவும் உள்ளது. மறு புறத்தில் கேவலமாகவும் உள்ளது.

மேற்குலகத்தவரிடமிருந்து நிவாரணங்களோ, உதவிகளோ தேவையில்லை எனக் கூறுவது ஒன்றும் தவறானதாக மாட்டாது. அவர்கள் உதவி என்ற ரீதியிலோ, அன்றி வேறு மார்க்கத்திலோ அணுகும் போது அதனை மறுத்து நிராகரித்து விடுவதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு. ஒரு வகையில் இது அவர்களின் தன்மான நடவடிக்கையாகவும் இருக்கலாம்.

ஆனால் தற்பொழுது ஜே.வி.பி காட்டும் சினமானது உதவி வேண்டாம் என்பதல்ல. உதவிகளை எங்களுக்கு மட்டும் செய்யுங்கள். நாங்கள் விரும்பாதவர்களுக்குச் செய்தல் கூடாது. மற்றும் உதவிகளை வழங்குங்கள், அவற்றை மேற்பார்வை செய்தலை நிறுத்தி விடுங்கள் என்பதாகும். ஜே.வி.பி யின் இந் நிலைப்பாடானது உயர்ந்ததொரு சித்தாந்தத்தின் பாற்பட்டதல்ல. இனவாதத்தின் பாற்பட்டதாகும்.

ஆனால் ஜே.வி.பி யினரின் நிலைப்பாட்டை முழு அளவில் ஏற்றுக் கொள்ள உதவி வழங்குவோர் தயாராக இல்லை. வழங்கப்படும் உதவிகளின் பங்கீடு, அவற்றின் பயன்பாடு என்பன குறித்து ஓரளவு அக்கறை கொண்டவர்களாகவே அவர்கள் உள்ளர். அவர்களின் இத்தகையதொரு நிலைப்பாடே ஜே.வி.பி யின் எதிர்ப்புக் கூச்சலுக்குக் காரணமாகும். அவர்களுக்கு தமது பொருட்களையே விநியோகிக்கின்றார்கள், அழுத்தத்தைப் பிரயோகிக்கின்றார்கள் என்பதாகும்.

ஆனால் உதவிகள் உதவுபவர்களின் நலன் சார்ந்ததாக இருப்பினும் கூட- அவர்கள் தமது நாட்டில் உள்ளவற்றை வழங்காது வேறு எதை வழங்குவார்கள் என எதிர்பார்க்க முடியும்? நிதி உதவி செய்யின் அதன் பயன்பாடு குறித்து கவனத்தில் கொள்ளாது எவ்வாறு இருக்க முடியும். அதுவும் இனவாத அரசு எனத் தெரிந்த பின்னும் எவ்வாறு அக்கறை காட்டாது இருக்க முடியும். இது ஜே.வி.பி க்கு விரும்பத்தகாததாக இருந்தால் வெளிநாட்டவர் உதவி வேண்டாம் எனக் கூறிவிட்டு மக்கள் முன்நின்று ஆட்சியைக் கைப்பற்ற வேண்டியது தானே?

# உலக வங்கியின் வதிவிடப்பிரதிநிதி தனது கூற்றை வாபஸ் பெறவேண்டும்

### - பாராளுமன்றத்தில் ஜே.வி.பி வலியுறுத்து

(கொழும்பு)

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்த கருத்துக்களை வாபஸ்பெற வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், உலக வங்கியின், பிரதிநிதி கடந்த சிலதினங்களுக்கு முன்னர் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியும், அதன் பின்னர் வெளியிட்ட அறிக்கையும் நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இந்த இரண்டு கருத்துக்களுக்கும் பாரியளவு வேறுபாடு இல்லையெனவும் அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்றம் நேற்றுக்காலை கூடியபோது விசேட உரையொன்றை ஆற்றுகையிலேயே விமல் வீரவன்ச இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

இலங்கைக்குள் செயற்படும் எந்தவொரு அமைப்பிற்கும் இவ்வாறான கருத்தைத் தெரிவிக்கும் உரிமை இல்லை எனவும் விமல் வீரவன்ச குறிப்பிட்டார். இதனால் பீற்றர்ஹரோல் தமது உரையினை வாபஸ் பெறாவிடின் அவரை மீள அழைக்குமாறு உலக வங்கிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும் அவர்கூறினார்.

விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு உத்தியோகபூர்வமற்ற நிலை ஒன்றை வழங்குவதற்கு உலக வங்கி பிரதிநிதிக்கு இருக்கும் உரிமை என்ன? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டே பீற்றர் ஹரோல் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார். என்றும் யுத்த நிறுத்த ஒப்பந்தமானது சட்டரீதியானது அல்ல என்றும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார்.

# நாட்டை மீளக் கட்டியெழுப்ப எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கவில்லை

### அமைச்சர் அனுரா பண்டார நாயக்க

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு எதிர்க்கட்சியிடமிருந்து போதுமான ஒத்துழைப்பு கிடைப்பதில்லையென சுற்றுலாத்துறை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அனுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக இடம் பெறும் பேச்சுவார்த்தைகளிலும் எதிர்கட்சி கலந்து கொள்வதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அம்பலாங்கொடை பராலிய பிரதேசத்தில் வீடமைப்பு செயற்திட்ட மொன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், எதிர்கட்சி நாட்டில் பொறுப்புடன் செயற்படாமை குறித்து நாம் வருத்தமடைகின்றோம். சனாதிபதி நாட்டின் தலைவி என்ற அடிப்படையில் அனைத்து அரசியல் கட்சிகளையும் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைத்தார். இதுவொரு தேசிய அனர்த்தமாகும். இது தனியே கட்சி ஒன்றிற்கு மாத்திரம் ஏற்பட்ட அனர்த்தமல்ல இரண்டு பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர். ஏதோ ஒரு பொய்யை ஏற்படுத்திக் கொண்டு தற்போது இவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருவதில்லை. பரவாயில்லை ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுவார்த்தைக்கு வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி அரசாங்கம் ஈன்ற அடிப்படையில் நாம் எமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இடர்காப்பு முகாமைத்துவ சட்ட மூலம் நிறைவேற்றம்

இடர்காப்பு முகாமைத்துவம் தொடர்பான சட்ட மூலம் இரண்டாவது முறை இடம் பெற்ற வாக்கெடுப்பின் பின்னர் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று பாராளுமன்றத்தில்இச் சட்டம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட வேளைஅதற்கு ஆதரவாக 57வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளது. ஐ.தே.கட்சி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா. ஆகியவற்றின் உறுப்பினர்கள் அரசுடன் சேர்ந்து வாக்களித்துள்ளன தமிழரசுக் கட்சி எதிராக வாக்களித்துள்ளது.

## பாக்.விமானப் படைத் தளபதி சிறிலங்காவிற்கு விஜயம்

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி எயார் மார்சல் "கலின் சதாக்" சிறிலங்கா விமானப்படைத் தளத்திற்கு நேற்றுக் காலை விஜயம் செய்தார்.

பாகிஸ்தான் விமானப்படைத் தலைவரை விமானப்படைத் தலைமையகத்தின் சிறிலங்கா விமானப்படையின் தலைவர் எயார் மார்சல் டொனால்ட் பேரேரா வரவேற்றார். இதன்போது கலின் சதான்சிற்கு விசேட மரியாதை அணிவகுப்பு ஒன்றும் வழங்கப் பட்டது. பின்னர் இரு நாட்டு விமானப படைத் தலைவர்களுக்கு மிடையில் கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது.

## பல்கலைக்கழக அனுமதிக்கு வேறுபரீட்சைகள் நடத்தப்படமாட்டாது

### -பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

பல்கலைக்கழக அனுமதிக்காக வேறு பரீட்சைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கவில்லையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு அப்பால் வேறு பரீட்சை நடாத்தவுள்ளதாக வெளியான வதந்திகளை முற்றிலும் நிராகரிக்கின்றோம் என ஆணைக்குழு அறிவித்துள்ளது. இவ் வதந்திகள் பொது மக்களையும், மாணவர்களையும் திசைதிருப்பும் நோக்கம் கொண்டவையாகக் காணப்படுகின்றன என பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் ரந்சித் மெண்டிஸ தெரிவித்துள்ளார். இவை அரசியல் ஆதாயம் தேடும் நோக்கிலானவையென அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐவருக்கு எதிராக குற்றப்பத்திரிகை

முன்னாள் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஐவருக்கும் எதிராக சட்டமா அதிபர் குற்றப பத்திரிகையை தாக்கல் செய்துள்ளார்.இதில் நால்வர் கொலையில் சம்பந்தப்பட்டதாகவும் ஒருவர் கொலைக்கு உதவினார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (32)

## மின்சார சபை ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்

இலங்கை மின்சார சபையின் தலைமையக ஊழியர்கள் நேற்று நடத்திய போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.கிழக்கு மாகாணத்தில் காணப்படும் 117 வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும் என வலியுறுத்தியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. இந்த நிலையில் இதற்கு உரிய தீர்வை பெற்றுத்தருவதாக உறுதியளிக்கப்பட்டதை அடுத்து ஊழியர்களின் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (32)

## மூன்று பேர் படுகாயம்

கொழும்பு பல்கலைக்கழகத்தில் நேற்று மாணவர் குழுக்களுக்கு இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது மூன்று மாணவர்கள் காயமடைந்துள்ளனர். இந்த சம்பவத்துக்கான காரணம் எவையும் இதுவரை வெளியாகவில்லை. (32)

-உலகவங்கி வதிவிடப்பிரதிநிதிக் கெதிராக-

# தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஆர்ப்பாட்டம் நடத்தத்திட்டம்

தேசப்பற்றுள்ளதேசிய இயக்கம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது. அண்மையில் உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹறோல்ட்தெரிவித்தாகக் கூறப்படும் கருத்தை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப் படவுள்ளது.

உலக வங்கியின் கொழும்பு அலுவலகத்திற்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கீழ் தனியரசு போன்ற அமைப்புள்ள தென பீற்றர் ஹறோல்ட் தெரிவித்ததாக கூறப்படும் செய்தி தொடர்பில் இலங்கையின் வெளியுறவு அமைச்சு அவரிடம் விளக்கம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# இருநூறு மீற்றருக்கு வீடமைக்கக் கூடாதென்ற சட்டத்திற்கு எதிராக மூதூரில் போராட்டம்

(மூதூர்)

மூதூர் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்கரை ஓரப் பிரதேசத்தில் இருநூறு மீற்றர் பகுதிக்குள் வீடுகள் மற்றும் கட்டடங்கள் அமைக்கக் கூடாதென அரசு அறிவித்தமையை எதிர்த்து அமைதிப் பேரணி ஒன்று நேற்று நடைபெற்றுள்ளது.

மூதூர் துறைப் பகுதியில் ஆரம்பமான இந்த அமைதிப் பேரலையில் ஆயிரக் கணக்கான முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பேரணி மூதூர் நகரங்களூடாக சுமார் ஒன்றரை மைல் தூரம் வரை நடைபெற்ற இந்தப் பேரணி மூதூரின் மையப் பகுதியிலுள்ள மூதூர்பிரதேசச் செயலகத்தில் முடிவடைந்தது.

அங்கு சனாதிபதியிடம் கையளிக்குமாறு கோரி அறிக்கை ஒன்றும் கையளிக்கப்பட்டது.

# நாட்டை மீளக்கட்டியெழுப்பும் முயற்சியில் எதிர்க்கட்சிகளின் யோசனைகளைக் கருத்திலெடுக்கவில்லை

-ஐ.தே.க.பா.உ ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்காக எதிர்க்கட்சி முன்வைத்தயோசனைகளை அரசாங்கம் கருத்தில்கொள்ளவில்லையென்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரதேச மட்டத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்கு எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கம் பாரியளவிலான அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்தாது மக்களுக்கு நிவாரங்களை வழங்கும். குறுகிய கால செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பிலிருந்து எடுக்கப்படும் தீர்மானங்களை அரசாங்கம் கிராமிய மட்டத்தில் ஏற்படுத்து வதில்லையெனவும் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## வீரச்சாவு..

என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

## ஓட்டமாவடியில்...

வாழைச்சேனை பொலிசில் இது பற்றிபுகார் செய்தனர். இப்படி அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட ஓட்டோ சாரதியின் சடலம் நேற்று காலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியை அண்மித்த கிரிமிச்சையில் கண்டெடுக்கப்பட்டது. ஓட்டோ சாரதி கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து ஓட்டமாவடிப் பிரதேசத்தில் பதட்ட நிலை காணப்பட்டாலும், அமைதி நிலவுகின்றது. வியாபார நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளது. பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. இதே இடத்தில் சில தினங்களுக்கு முன்பு ஆயுதக் குழுவொன்றினால் விடுதலைப் புலிப் போராளியொருவர் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை..

ளம் காணப்பட்டு உரியவர்களிடம் சட்டரீதியாக பெறும் நடவடிக்கைகள் இருவார காலத்திற்குள் பூர்த்தி செய்யப்படும் என்றும் அதன் பின்பு நிரந்தர குடியிருப்பு வசதிகள் மக்களின் கருத்துக்கள் பெற்று அமைக்கப்படும் என்றும் அரசாங்க அதிபர் உறுதியளித்துள்ளார். ஒவ்வொரு கிராமத்திலும் குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 15 பேர் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. கடல் பாதுகாப்பு வலயத்தை 200 மீற்றரிலிருந்து 100 மீற்றராகக் குறைப்பதன் மூலம் காணி தொடர்பான பிரச்சினைக்கு இலகுவான தீர்வொன்றைக் காண முடியுமென பொதுமக்களினால் யோசனையொன்று முன்வைக்கப்பட்ட போதிலும் இது தொடர்பான முடிவுகளை அரசாங்கம் தான் எடுக்க வேண்டுமென அரசாங்க அதிபர் பதிலளித்தார்.

## ஏழுபடையினரை...

பக் கட்ட விசாரணைகள் யாழ். மேலதிக நீதவான் திருமதி. ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று இடம் பெற்றது.

அவ்வேளையில் சம்பவம் இடம் பெற்ற வேளையினில் அங்கு பிரசன்னமாகியிருந்தாகக் கூறப்படும் படையீனர் எழுவரினதும் துப்பாக்கிகள் பொலிசாரால் பெறப்பட்டு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டிருந்தது.அவற்றை நீதிமன்ற பாதுகாப்பில் வைக்க உத்தரவிடப்பட்ட நீதிவான் திருமதி. ஸ்ரீநிதி நந்தசேகரன் குறித்த துப்பாக்கிகளை பயன்படுத்திய படையினர் அனைவரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி நீதிமன்றினில் ஆஜர் செய்யவும் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்ற தினத்தன்று நீதிவானின் உத்தரவிற்கு அமைய யாழ். பொலிசாரால் பொறுப்பேற்கப் பட்டிருந்த இத்துப்பாக்கிகள் இது வரையும் யாழ்.பொலிஸ் நிலையத்தினில் வைக்கப்பட்டிருந்தன.

கடந்த வெள்ளியன்று யாழ். போதானாவைத்தியசாலைக்கு முன்பாக இடம் பெற்ற படையினரது வாகன விபத்தில் பாடசாலை மாணவியொருத்தி உயிரிழந்ததும் அதையடுத்து இடம் பெற்ற அசம்பாவிதங்களின் போது படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை நடாத்தியிருந்ததும் தெரிந்ததே. (27)

## முஸ்லிம்..

சிந்தனையை ஏற்படுத்தி தன் காரியத்தை சாதித்துக் கொள்வதற்காக செய்யப்பட்ட இந்த அப்பட்டமான படுகொலையில் சிறிலங்கா படைத்தரப்பின் கைவேலையும் இருப்பதாகச் சந்தேகிக்கின்றோம். முன்பு நிகழ்ந்த சம்பவங்களையும் இந்த சம்பவம் நடந்த முறை, இடம், நேரம் போன்றவற்றையும் ஒப்பிடும் போது அந்த சந்தேகம் மேலும் வலுவடைகின்றது. தமிழ் பேசும் சமூகம் இந்த நிகழ்வை மிகக்கவனமாக கையாள வேண்டும். அனைவரும் பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டு குற்றம் இழைத்தவர்களை சரியாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இந்த தருணத்தில் இப்படியான ஒரு நிகழ்வைச் செய்வதால் லாபமடையக் கூடிய தரப்பு பேரினவாதிகள் மட்டுமே என்பது சிந்திக்கத் தெரிந்த எல்லோருக்கும் புரியும். ஆகவே அரசியல் தலைவர்கள் மக்களை பகைமை பாதாளத்திற்குள் தள்ளிவிட முயல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம். ஆண்மீகத் தலைவர்கள் மக்களுக்கு தகுந்த விளக்கமளித்து சரியான திசை நோக்கி அவர்களை ஆறுதல் படுத்த வேண்டும் என்று வேண்டுகின்றோம். சிக்கல்கள் தொடருமானால் அதனால் வருந்தப் போவது அடிமட்ட தொழிலாளர்களும்; விவசாயிகளுமே என்பதை யாவரும் மனதில் கொள்ள வேண்டும். நெஞ்சை உருக்கும் இந்த சம்பவத்தில் உயிரிழந்த சகோதரரின் குடும்பத்தினருக்கும், உறவினர்கள், நண்பர்களுக்கும் விடுதலைப்புலிகள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றனர். இந்த படுகொலையை செய்தவர்களின் கபட நோக்கம் நிறைவேற விட வேண்டாம் என்று மட்டக்களப்பு - அம்பாறை அரசியல் துறை அனைவரையும் இறைஞ்சிக் கேட்டுக் கொள்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீதியைக்கடக்க முயன்ற வயோதிபர் உந்துருளி மோதியதில் காயம்

வீதியைக் கடக்க முயன்ற போது உந்துருளி மோதி வயோதிபர் படுகாயமடைந்துள்ளார்.

அல்வாயில் வீட்டிற்கு எதிரேயுள்ள பலசரக்கு கடையில் பாண்வாங்கி விட்டு வீதியைக் கடக்கமுயன்ற வயோதிபர் உந்துருளி மோதி தலையில் படுகாயமடைந்துள்ளார்.

அல்வாய் கிழக்கைச் சேர்ந்த செல்லையா சிவப்பிரகாசம் (வயது-64) என்பவரே நேற்று மாலை 7.30 மணியளவில் விபத்துக்குள்ளானார்.

மேற்படி படுகாயமடைந்த வயோதிபர் உடனடியக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (கா)

# முகமூடிகள் முன் நிறுத்தி மட்டக்களப்பில் பொலிசார் சோதனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகர்ப் பிரதேசத்தில் சிறிலங்கா பொலிசாரும், இராணுவத்தினரும் முகமூடி நபர்களைப்பயன் படுத்திச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள் ளனர்.

நேற்று முன்தினம் மாலை வேளை நடைபெற்ற இந்தச் சோதனை நடவடிக்கையானது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொலிசாரும், இராணுவத்தினரும் வாகனங்களில் வந்தவர்களை இறக்கியும் வீதியில் செல்வோரை ஒவ்வொருவராக முகமூடி நபர்களுக்கு முன்பாகச் செல்ல விட்டும் இந்தச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# வெலிக்கந்தப் பிரதேசத்தில் க.கா.குழு உப அலுவலகம்

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தை பிரதேசத்திலும் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் உப அலுவலகம் ஒன்று திறக்கப்பட விருக்கின்றது.

மன்னம்பிட்டியில் இந்த அலுவலகம் நேற்று திறக்கப்படவிருந்த போதிலும் கட்டட உரிமையாளர் இறுதி நேரத்தில் அதனை வழங்க மறுத்து விட்டதால் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்டஅலுவலகத்தின் உப அலுவலகமாக செயற்படவிருக்கும் இவ் அலுவலகத்திற்கு பிரதி திங்கட்கிழமை தோறும் கண்காணிப்பாளர் விஜயம் செய்வார். வெலிக்கந்தை பிரதேசத்தில் இடம் பெற்று வரும் சில சம்பவங்களையடுத்தே இந்த அலுவலகம் திறக்கப்பட விருக்கின்றது.

# வீடுகளுடைத்து திருடிவந்தவர் காவல் துறையிடம் சிக்கினார்

-பெருமளவு நகைகள், பொருட்கள் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அண்மை நாட்களாக பகல் வேளைகளில் வீடுடைத்து நகைகள், பொருட்கள் என்பனவற்றினை களவாடி வந்த நபர் புதுக்குடியிருப்பு காவல் பணிமனையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடம் இருந்து பெருந்தொகையான தங்க நகைகளும், இலத்திரனியல் பொருட்களும் ,உடுபுடவைகளும் மற்றும் துவிச்சக்கர வண்டியும் மீட்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் மீட்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் மேற்படி நபரால் திருடப்பட்ட பொருட்களும், துவிச்சக்கர வண்டியும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென முல்லைத்தீவு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார் (சோ)

# சுனாமியால் சிறில. விமானசேவைக்கு 10 மில்லி. டொலர் நட்டமேற்படும்

சுனாமி மற்றும் எரிபொருள் விலை உயர்வால் சிறிலங்கா ஏயர் லைன்சுக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர் (7.55 மில்லியன் யூரோ) அளவில் நட்டம் ஏற்படக் கூடும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிறுவன அதிகாரி சந்தான் டி சில்வா இதைத் தெரிவித்துள்ளார். ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கிற்கான வாராந்த விமான சேவையை அதிகரிக்க உள்ளதாகவும், இம்மாத இறுதியில் நியூயோர்க்கிற்கான நாளாந்த சேவையை தொடங்க உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். அதேபோல் பாங்கொக் வழியாக பீஜிங் நகருக்கான வாரத்தில் மூன்று நாட்கள் விமான சேவையும் விரைவில் தொடங்கப்படவுள்ளது. ஆழிப் பேரலைக்கு முன்பாக 2 ஏயர்பஸ் மற்றும் ஏ-320 விமானம் ஆகியவற்றை குத்தகைக்கு எடுப்பது தொடர்பான முடிவு கைவிடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

## தமிழ்ச்..

ணங்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதில் அரசாங்கம் பின்னடிப்பது தொடர்பாகவும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு எடுத்துக் காட்டும் முகமாக மேற்கொண்டுள்ள இவ் ஐரோப்பிய சுற்றுப் பயணத்திற்காக நேற்றுப் பிற்பகல் 5.00 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து தரைவழியாகப் புறப்பட்ட தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா.நடேசன், விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அரசியல்துறை மகளிர் துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி ஆகியோர் உள்ளடங்கிய குழுவினர் ஓமந்தைக்கு தரைவழியாகச் சென்று அங்கிருந்து விசேட உலங்குவானூர்தி மூலம் கொழும்பைச் சென்றடைந்தனர். இவர்கள் தமது ஐரோப்பிய பயணத்தின் முதற்கட்டமாக இன்று நோர்வேக்கு விஜயம் செய்வார்களெனவும் தொடர்ந்து ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு பயணிப்பார்களெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது